Education breeds confidence.
Confidence breeds hope.
Hope breeds peace.
- Confucius

The value of a college education is not the learning of many facts but the training of the mind to think.
- Albert Einstein

The principal goal of education is to create individuals who are capable of doing new things, not simply of repeating what other generations have done.
- Jean Piaget
Swiss Cognitive Psychologist.

The whole purpose of education is to turn mirrors into windows.
- Sydney J.Harris

Intelligence plus character - that is the goal of true education.
- Martin Luther King Jr.,

Educating the mind without educating the heart is no education at all.
- Aristotle

The aim of a college education is to teach you to know a good man when you see one.
- Willam James
American Philosopher

The true purpose of education is to make minds, not careers
- William Deresiewicz

The great aim of education is not knowledge but action.
- Herbert Spencer

# வாழ்வியல் கல்வியும் மனித உரிமைகளும்

## (மதிப்புக் கல்வி)

"A University stands for humanism, for tolerance, for reason, for the adventure of ideas and for the search of truth. It stands for the onward march of the human race towards ever higher objectives. If the Universities discharge their duties adequately, then it is well with the Nation and the People"

Jawaharlal Nehru

தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)
புத்தனாம்பட்டி - திருச்சி மாவட்டம்

## பதிப்பாசிரியர்கள்

முனைவர். கி.கீதா

முனைவர். வா.ரா. விஜயலெட்சுமி

பேரா. து.மகேஸ்வரி

பேரா. என்.ஆர்.சக்திவேல்

பேரா. பா.சோழன்

முனைவர். ரெ.மலர்விழி


# இடைக்கால இலக்கியங்கள்

## (பக்தி, சிற்றிலக்கியங்கள்)


தமிழ்த்துறை

**நேரு நினைவுக் கல்லூரி** (தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் "A" தரச் சான்றிதழ் பெற்றது

(திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது)

**புத்தனாம்பட்டி-621 007.**

**திருச்சிராப்பள்ளி மாவட்டம்.**

# இக்காலத் தமிழ்க் கவிதை



விழிவிழி உன்விழி நெருப்புவிழி - உன்
விழிமுன் சூரியன் சின்னப் பொறி...

தமிழ்த்துறை
**நேரு நினைவுக் கல்லூரி**

வெறுங்கை என்பது மூடத்தனம் - உன்
விரல்கள் பத்தும் மூலதனம்!
கருங்கல் பாறையும் நொறுங்கிவிழும் - உன்
கைகளில் பூமி சுழன்றுவரும்!

விரக்தி என்னும் சிலந்தி வலைக்குள்
வேங்கைப் புலிநீ தூங்குவதா?
இருட்டைக் கிழிக்கும் வெளிச்சக் கீற்று
எங்கே கிழக்கெனத் தேடுவதா?

தோள்கள் உனது தொழிற்சாலை - நீ
தொடுமிட மெல்லாம் மலர்ச் சோலை!
தோல்விகள் ஏதும் உனக்கில்லை - இனி
தொடுவா னம்தான் உன் எல்லை!

- தாராபாரதி

**பதிப்புக்குழு**

முனைவர் சோம. இராசேந்திரன்
முனைவர் கி. கீதா
முனைவர் வா.இரா. விஜயலெட்சுமி
முனைவர் து. மகேஸ்வரி, முனைவர் சி. பிரபாகரன்
பேராசிரியர் பெ. வனிதா, பேராசிரியர் பா.சோழன்


Published by
**PRENESH PUBLICATION**
No. 16, Chinnappa Street,
Noorudeen Complex, Triplicane,
Chennai 600 005.

9 788193 629680

# இடைக்காலத் தமிழ்க் கவிதை









தமிழ்த்துறை

நேரு நினைவுக் கல்லூரி

புத்தனாம்பட்டி

ஒன்றே குலமும் ஒருவனே தேவனும்
நன்றே நினைமின் நமனில்லை நாணாமே
சென்றே புகுங்கதி இல்லைநும் சித்தத்து
நின்றே நிலைபெற நீர்நினைந் துய்மினே.

– திருமந்திரம்



பதிப்புக்குழு

முனைவர் சோம. இராசேந்திரன்
முனைவர் கி. கீதா
முனைவர் வா. இரா. விஜயலட்சுமி
முனைவர் சி. பிரபாகரன்
முனைவர் ரெ. மலர்விழி
பேராசிரியர் அ. சசிகலா

ISBN 978-93-87946-27-9
9 789387 946279

Raja Publications
Tiruchirappalli - 620 023.
Cell : 9600535241

"மண்திணி ஞாலத்து வாழ்வோர்க் கெல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே"




"பிறத்தலும் மூத்தலும் பிணிபட்டு இரங்கலும்
இறத்தலும் உடையது இடும்பைக் கொள்கலம்
மக்கள் யாக்கை இதுவென உணர்ந்து
மிக்க நல்லறம் விரும்புதல் புரிந்தேன்"

தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)
புத்தனாம்பட்டி - 621 007.
திருச்சி மாவட்டம்.

# காப்பிய இலக்கியம்

## தமிழ்ச்செய்யுள் திரட்டு



தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி

பதிப்பாசிரியர்

முனைவர் சோம.இராசேந்திரன்

முனைவர் ஆர்.வரதராசன்

முனைவர் கி.கீதா

முனைவர் சி.பிரபாகரன்

# பழந்தமிழ் இலக்கியம்



தமிழ்த்துறை

நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)

புத்தனாம்பட்டி - திருச்சி மாவட்டம்




# தமிழ்ச் செய்யுள் திரட்டு

செய்யுள் (இக்கால இலக்கியம்),
சிறுகதை, பயன்முறைத் தமிழ்,
தமிழ் இலக்கிய வரலாறு

## இளையர் பட்ட வகுப்புகள் முதலாமாண்டு

(கலையியல் / அறிவியல் / வணிகவியல் / வணிக மேலாண்மையியல்)

## பகுதி - 1: தமிழ் - தாள் - 1 (முதற் பருவம்)

(2015-2016 கல்வி ஆண்டு முதல் பயிலும்
மாணவர்களுக்கு)

தமிழ்த்துறை


## நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)

தேசிய தர மதிப்பீட்டுக் குழுமத்தால் "A" தரச் சான்றிதழ் பெற்றது
திருச்சிராப்பள்ளி பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைவு பெற்றது
**புத்தனாம்பட்டி-621 007.**
**திருச்சி மாவட்டம்.**



கற்க கசடறக் கற்பவை கற்றபின்
நிற்க அதற்குத் தக

# தமிழ்ச் செய்யுள் திரட்டு

செய்யுள் (பக்தி, இடைக்கால இலக்கியம்),
தமிழ்ச் செம்மொழி வரலாறு, மொழிபெயர்ப்பியல்,
தமிழ் இலக்கிய வரலாறு

## இளையர் பட்ட வகுப்புகள் முதலாமாண்டு

( கலையியல்/அறிவியல்/வணிகவியல்/வணிக மேலாண்மையியல் )

**பகுதி - I : தமிழ் - தாள் - II (இரண்டாம் பருவம்)**

**(2015 - 2016 கல்வி ஆண்டு முதல்
பயிலும் மாணவர்களுக்கு)**


**தமிழ்த்துறை**

## நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)

(பாரதிதாசன் பல்கலைக்கழகத்துடன் இணைக்கப்பெற்றது)
தேசியத் தர மதிப்பீட்டுக் குழுமத்தால் "A" தரச்சான்றிதழ் வழங்கப்பட்டது.

**புத்தனாம்பட்டி - 621 007.**

**திருச்சி மாவட்டம்.**



## முனைவர் ரெ.மலர்விழி

**பிறந்த ஊர்:** திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி வட்டம், காட்டூர், கொத்தமங்கலம்.

**தாய், தந்தை:** அ.ரெத்தினம் ஆசிரியர் (ஓய்வு), ரெ.துளசியம்மாள்

**மகள்:** மு.ஸ்ருதி, எட்டாம் வகுப்பு படிக்கிறார்.

**இளங்கலை:** பி.லிட், தமிழ் இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம்

**முதுகலை:** எம்.ஏ., தமிழ் இலக்கியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வியல் நிறைஞர்:** உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**முனைவர் பட்டம்:** சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி, மண்ணச்சநல்லூர்

**பங்கேற்ற கருத்தரங்கம்:** பத்து பன்னாட்டு கருத்தரங்கம், மூன்று தேசிய கருத்தரங்கம்

**பங்கேற்ற பயிலரங்கம்:** மூன்று தஞ்சைப் பல்கலைக் கழகம் நடத்திய சங்க இலக்கிய பயிலரங்கம், தேசியக் கல்லூரி நடத்திய தொல்காப்பியப் பயிலரங்கம், ஜமால் முகமது கல்லூரி நடத்திய தேசியக் கருத்தரங்கம்

**பணிபுரியும் கல்லூரி:** நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி

**பணி அனுபவம்:** மூன்று ஆண்டுகள்

**ஆற்றிய சொற்பொழிவு:** திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் நடத்திய சொற்பொழிவில் மருதத்திணையில் தலைவி கூற்று என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றியது. கவி உள்ளம் உண்டு. எழுதிய கவிதைகள் சமூகத்தின் மீது அக்கறையும் பொறுப்பும் கொண்டவையாக அமைந்துள்ளது. நூல் இன்னும் வெளியாகவில்லை. கருணை உள்ளம் கொண்டவர்.

கவிஞன் பதிப்பகத்தினரால் ஆசிரிய ஜோதி விருதும் குறிஞ்சிக் கபிலர் தமிழ்ச் சங்கத்தினரால் நல்லாசிரியர் விருதும் கிடைத்துள்ளது.

001755

முனைவர்

# கி.இராசா



இளமைப்பருவத்திலே இனப்பற்றும், மொழிப்பற்றும் கொண்டவராகத் திகழ்ந்திருக்கிறார். வேகமும் விவேகமும் கொண்ட துடிப்பான இளைய காளையார் பருவம் அவருக்கே உரித்தானதாக அமைந்திருந்தமையை அறிய முடிகிறது.

**முனைவர் ரெ.மலர்விழி**




முனைவர் கி. கீதா

உதவிப் பேராசிரியர்

தமிழ்த்துறை

நேரு நினைவுக் கல்லூரி

புத்தனாம்பட்டி


கொட்டப்பட்டு

# ப. சக்திவேலன்

## வாழ்க்கை வரலாறு

முனைவர் கி. கீதா




# மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை கலிவெண்பா

இந்நூலை உள்ளன்போடு படித்துப் பாராயணம் செய்யும் மங்யைர் நல்ல கணவனையும் நன்மக்களையும் பெற்று மகிழ்வர்



# மதுரை ஸ்ரீ மீனாட்சியம்மை கலிவெண்பா

இந்நூலை உள்ளன்போடு படித்துப் பாராயணம் செய்யும் மங்யைர் நல்ல கணவனையும் நன்மக்களையும் பெற்று மகிழ்வர்



விளக்கவுரையாசிரியர்கள்:

சிவத்தமிழ்ச்செல்வர் புலவர் பி.ரா. நடராசன்

முனைவர் கி. கீதா சந்திரசேகரன்



கி.கீதா

முனைவர். கி.கீதா, புத்தனாம்பட்டி
நேரு நினைவுக் கல்லூரியில் தமிழ்த்துறை
உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

1670

# ஆ.வே.இரா.கிருட்டிணசாமி



தமிழாசிரியராயப் பணியாற்றிய காலக்கட்டத்தில் அப்பணியைச் சிறப்பாக
ஆற்றி, பற்பல மாணவர்கள் மனதில் இடம்பிடித்தவர். அப்பணிகளுக்கிடையே
பொருளாதாரத் தட்டுப்பாடு, இடையறாது திருக்குறள் சிந்தனையோடு
வாழ்ந்துத் திருக்குறள் கருத்துக்களைப் பரப்பிவரும் இவர் வியப்பிற்குரியவர்

கி.கீதா



கி.கீதா

முனைவர். கி.கீதா, புத்தனாம்பட்டி
நேரு நினைவுக் கல்லூரியில் தமிழ்த்துறை
உதவிப் பேராசிரியராகப் பணிபுரிகிறார்.

1670

# ஆ.வே.இரா.கிருட்டிணசாமி



தமிழாசிரியராயப் பணியாற்றிய காலக்கட்டத்தில் அப்பணியைச் சிறப்பாக ஆற்றி, பற்பல மாணவர்கள் மனதில் இடம்பிடித்தவர். அப்பணிகளுக்கிடையே பொருளாதாரத் தட்டுப்பாடு, இடையறாது திருக்குறள் சிந்தனையோடு வாழ்ந்துத் திருக்குறள் கருத்துக்களைப் பரப்பிவரும் இவர் வியப்பிற்குரியவர்

கி.கீதா

WITH COURAGE AND FAITH

ISBN: 978-81-92288-2-8-1



## 20. சங்க இலக்கியங்களில் பாலின சமத்துவம்

முனைவர் கி. கீதா எம்.ஏ.,எம்.ஃபில்.,பிஎச்டி.,
உதவிப் பேராசிரியர்,
தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

சங்க காலம் கல்வியில், கலைகளில், பண்பாட்டில் சிறந்து விளங்கிய பொற்காலம். பண்பட்ட வாழ்க்கையை வாழ்ந்த புலவர் பெருமக்கள் உயர்ந்த இலக்கியங்களைப் படைத்தக் காலம். ஒரு சமுதாயம் சீருடனும், சிறப்புடனும், உயர்ந்த குறிக்கோளுடனும் வாழ ஆணும் பெண்ணும் ஒரு நிகராக மதிக்கப்படவேண்டும். சம உரிமை பெற்று வாழவேண்டும். அப்போதுதான் பண்பட்ட வாழ்க்கை வாழ இயலும். அத்தகைய உயர்ந்த வாழ்க்கையை, உரிமை வாழ்க்கையை, குறிக்கோள் வாழ்க்கையை, இலக்கியங்கள் விளக்கிக் காட்டுகின்றன. இலக்கியங்கள் காலத்தைக் காட்டும் கண்ணாடி என்பர். சங்க இலக்கியம் அக்கால சமுதாய நிலைகளைப் பிரதிபலிக்கிறது. பெண்மை போற்றப்பட்டது, நேசிக்கப்பட்டது, மதிக்கப்பட்டது. உரிமை வாழ்வில், பண்பு நலத்தில், மனையற மாண்பில், கடமை உணர்வில், அரசியலறிவில், நாட்டுப்பற்றில் ஆண்களைப் போல, மகளிர் சிறந்து விளங்கிய பான்மையை சங்க இலக்கியம் புலப்படுத்துகிறது.

### கல்வியும் உரிமையும்

சங்க காலத்தில் ஆடவர் பெண்டிர் ஆகிய இருபாலரும் கல்வி கற்பதில் சம உரிமை பெற்றிருந்தனர். கல்வியில் பல பிரிவுகள் இருந்தன. போர்க்கலை, அரசியல், பொருளீட்டல் முதலான துறைகள் சார்ந்த கல்விகளை ஆடவர் கற்றனர். மனையறம் பேணும் கல்வியோடு நுண்கலைகளையும் மகளிர் பயின்றனர். பெரும் புலவர்களாகத் திகழ்ந்தனர்.

**“ பண்டைத் தமிழ்ச் சமுதாய அளவில் நோக்கின் பெண் கற்கும் உரிமையும் கவிபாடும் உரிமையும் காதல் உரிமையும் காதல் களவு செய்யும் உரிமையும் காதலனை இடித்துரைக்கும் உரிமையும் இல்லறத் தொழிலுரிமையும் பெருமையும் புகழும் எல்லாம் ஆடவர்க்கு நிகராகப் பெற்றிருந்தனர்”**
என்றுக் கூறுவர்.

தலைவன் தலைவிக்குக் கூறப்பட்டுள்ள பொருத்தங்களுள்,

**“பிறப்பே குடிமை ஆண்மை யாண்டோ
உருவு நிறுத்த காம வாயில்
நிறையே யருளே உணர்வோடு திரவென
முறையுறக் கிளந்த ஒப்பினது வகையே”**
(தொல்-கற்பியல்:51)

# கூற்றில் தோழி

ISBN 978-81-908592-2-6

ரெ. மலர்விழி,
உதவிப் பேராசிரியை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

சங்க அக இலக்கியங்களில் கூற்று முறைகள் தனித்த இடம் பெறுகின்றன. கூற்றுக்கள் என்ற சிறப்பான பகுதி அகவிலக்கியத்திற்கே உரியதாகும். ஒருவர் தம்முடைய கருத்தை வெளிப்படுத்த இவை உதவுகின்றது. கூற்று என்ற அம்சம் அகப்பாட்டின் அமைப்புக் கூறுகளில் மிக அடிப்படையானது. கூற்று என்ற அமைப்புக்கூறு அகப்பாட்டின் அமைப்பைத் தெளிவாக வரையறை செய்கிறது.

ஒன்றினைக் கூறுவதற்குரிய தகுதியுடையோர் அதனைக் கேட்பதற்குரிய மரபுடையோரிடம் கூறும் செய்தி, காலம், இடம், கூறும் முறை முதலான கட்டுக்களுக்குட்பட்டு நேரிடையாக அல்லது மறைமுகமாக உணர்த்துவது கூற்று எனலாம். ஒரு கூற்று எதை உணர்த்துகின்றது எப்படி வெளிப்படுகிறது என்பதைத்தானே வெளிப்படுத்தும் முறையில் அதன் பெயர் குறிக்கப்பட்டுள்ளமைத் தொல்காப்பியரின் சொல்லாட்சித் திறனைப் பறைசாற்றுவதேயாகும். தலைவனும் தலைவியும் காதல் கொண்டு இன்புற்று வாழும் களவிலும், தங்கள் திருமணத்திற்குத் தடையாக இருக்கும் பெற்றோர்கள் அறியாவண்ணம் செல்லும் உடன் போக்கின்போதும், கற்பு வாழ்க்கை மேற்கொண்டு நடத்தும்போதும் கூற்றுக்கள் நடைபெறுகின்றது.

இக்கூற்றின் மூலம் அக்கால வாழ்வியல் ஒழுகலாறுகள் அகமாந்தர் தம் நடைமுறைச் சிக்கல்கள் பண்பாடு ஆகியவற்றை அறியமுடிகின்றது. இம்முறையிலே சங்க இலக்கியங்கள் படைக்கப்பட்டுள்ளன. கூற்றிற்குரியோரை இருவகையாகப் பிரிக்கலாம்.

1. களவில் கூற்றிற்குரியோர்
2. கற்பில் கூற்றிற்குரியோர்

களவில் தோழியின் பங்கு.

களவு வாழ்க்கை என்ற தேரின் அச்சாணியுடன் கூடிய சக்கரம் போன்றவள் தோழி. அவளின் செயல்திறன் இல்லையானால், தலைவன்



## முனைவர் ரெ.மலர்விழி

**பிறந்த ஊர்:** திருச்சிராப்பள்ளி மாவட்டம் இலால்குடி வட்டம், காட்டூர், கொத்தமங்கலம்.

**தாய், தந்தை:** அ.ரெத்தினம் ஆசிரியர் (ஓய்வு), ரெ.துளசியம்மாள்

**மகள்:** மு.ஸ்ருதி, எட்டாம் வகுப்பு படிக்கிறார்.

**இளங்கலை:** பி.லிட், தமிழ் இலக்கியம், சென்னைப் பல்கலைக்கழகம்

**முதுகலை:** எம்.ஏ., தமிழ் இலக்கியம், அண்ணாமலைப் பல்கலைக்கழகம்

**ஆய்வியல் நிறைஞர்:** உருமு தனலெட்சுமி கல்லூரி, திருச்சிராப்பள்ளி

**முனைவர் பட்டம்:** சிதம்பரம் பிள்ளை மகளிர் கல்லூரி, மண்ணச்சநல்லூர்

**பங்கேற்ற கருத்தரங்கம்:** பத்து பன்னாட்டு கருத்தரங்கம், மூன்று தேசிய கருத்தரங்கம்

**பங்கேற்ற பயிலரங்கம்:** மூன்று தஞ்சைப் பல்கலைக் கழகம் நடத்திய சங்க இலக்கிய பயிலரங்கம், தேசியக் கல்லூரி நடத்திய தொல்காப்பியப் பயிலரங்கம், ஜமால் முகமது கல்லூரி நடத்திய தேசியக் கருத்தரங்கம்

**பணிபுரியும் கல்லூரி:** நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி

**பணி அனுபவம்:** மூன்று ஆண்டுகள்


**ஆற்றிய சொற்பொழிவு:** திருச்சிராப்பள்ளி தமிழ்ச்சங்கம் நடத்திய சொற்பொழிவில் மருதத்திணையில் தலைவி கூற்று என்ற தலைப்பில் சொற்பொழிவு ஆற்றியது. கவி உள்ளம் உண்டு. எழுதிய கவிதைகள் சமூகத்தின் மீது அக்கறையும் பொறுப்பும் கொண்டவையாக அமைந்துள்ளது. நூல் இன்னும் வெளியாகவில்லை. கருணை உள்ளம் கொண்டவர்.

கவிஞன் பதிப்பகத்தினரால் ஆசிரிய ஜோதி விருதும் குறிஞ்சிக் கபிலர் தமிழ்ச் சங்கத்தினரால் நல்லாசிரியர் விருதும் கிடைத்துள்ளது.

001755

முனைவர்

# கி.இராசா



இளமைப்பருவத்திலே இனப்பற்றும், மொழிப்பற்றும் கொண்டவராகத் திகழ்ந்திருக்கிறார். வேகமும் விவேகமும் கொண்ட துடிப்பான இளைய காளையார் பருவம் அவருக்கே உரித்தானதாக அமைந்திருந்தமையை அறிய முடிகிறது.

**முனைவர் ரெ.மலர்விழி**

# மானுட வாழ்வியலுக்கு அ∴றிணை உயிர்கள் கற்பிக்கும் வாழ்வியல் நெறி

*முனைவர் ரெ.மலர்விழி, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி.

முன்னுரை

படைப்பாளர்களின் முக்கிய நோக்கமாக இருப்பது நமது படைப்பு வழியாக மனித வாழ்வியலை வடித்தெடுப்பதே ஆகும். வாழ்வியல் என்பது மக்களின் பழக்க வழக்கம், நம்பிக்கை, ஆண் - பெண் உறவு, சமுதாய அமைப்பு, வாழ்க்கைப் போராட்டம், கல்வி, அரசியல், பொருளியல் என எண்ணற்ற களங்களை உள்ளடக்கியது. இயந்திரத்தனமான வாழ்க்கையில் தொலைந்து போன இன்றைய சமுதாயத்தினர் சங்க கவிஞர்களின் இயற்கை மீதான பார்வை, பாடல்களை வாசிக்கும் பல புதிய பரிமாணங்களை விட்டுச் செல்லக் கூடியதாகவே இருக்கின்றது. இந்நிகழ்வுகள் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமையும் வகையில் அறிவுறுத்துகின்ற பணியினை இலக்கியங்கள் செய்து வருகின்றன. அ∴றிணை உயிர்கள் வாயிலாக மனித வாழ்வுக்கு அடிப்படையான வாழ்வியல் கூறுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை எடுத்தியம்புவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் மக்கள் தம் காதல் நினைவுகளைக் காண முயன்றனர். இயற்கைக் காட்சிகள் பல திறந்தன. அ∴றிணை உயிர்களின் செயல்களும் மிகப்பல. எனினும், அவற்றுள் குடும்பத் தொடர்பான கருத்துக்களே தமிழனத்தின் நெஞ்சைக் கவர்ந்தன. அ∴றிணை உயிர்களின் வாழ்க்கை மனித குல வாழ்வியல் கூறுகளுக்கு அரண் சேர்ப்பதாகும். இயற்கையை இயற்கையாகப் படைத்தல் எனும் நோக்கமில்லாமலும் மனித வாழ்வியலோடு இணைத்துப் பார்க்கும் போக்கு சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

மக்களிடத்தும் மற்ற உயிர்களிடத்தும் அன்பு கொண்டு வாழ வேண்டும் என்னும் உயரியக் கொள்கையினை அன்றில், புறா, பல்லி, பசு, மான், குரங்கு, யானை போன்ற உயிர்களின் மூலம் மானுடச் சமுதாயத்திற்கு எடுத்து இயம்புகின்றனர். தலைவன், தலைவி அன்பினை வெளிப்படுத்தும் குறியீடுகளாக அ∴றிணை உயிர்கள் காணப்படுகின்றன.

குறுந்தொகைப் பாடல்களில் அ∴றிணை உயிர்

குறுந்தொகைப் பாடல்கள் பெரும்பாலும் தலைவனுடைய பண்புகளுக்கு அரண் செய்யும் வகையில் அ∴றிணை உயிர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பொருளை முன்னிட்டும் பரத்தையரை முன்னிட்டும் தலைவியை, தலைவன் பிரிந்து செல்லும் போது இயற்கை காட்சிகளில் தன் காதல் இயல்பினை இணைத்துக் காணும் அளவிற்கு அ∴றிணை உயிர்களின் வாழ்வும் மனித இயல்புகளும் இயைந்து செல்கின்றன.

"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

# மானுட வாழ்வியலுக்கு அஃறிணை உயிர்கள் கற்பிக்கும் வாழ்வியல் நெறி

*முனைவர் ரெ.மலர்விழி, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி.

## முன்னுரை

படைப்பாளர்களின் முக்கிய நோக்கமாக இருப்பது நமது படைப்பு வழியாக மனித வாழ்வியலை வடித்தெடுப்பதே ஆகும். வாழ்வியல் என்பது மக்களின் பழக்க வழக்கம், நம்பிக்கை, ஆண் - பெண் உறவு, சமுதாய அமைப்பு, வாழ்க்கைப் போராட்டம், கல்வி, அரசியல், பொருளியல் என எண்ணற்ற களங்களை உள்ளடக்கியது. இயந்திரத்தனமான வாழ்க்கையில் தொலைந்து போன இன்றைய சமுதாயத்தினர் சங்க கவிஞர்களின் இயற்கை மீதான பார்வை, பாடல்களை வாசிக்கும் பல புதிய பரிமாணங்களை விட்டுச் செல்லக் கூடியதாகவே இருக்கின்றது. இந்நிகழ்வுகள் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமையும் வகையில் அறிவுறுத்துகின்ற பணியினை இலக்கியங்கள் செய்து வருகின்றன. அஃறிணை உயிர்கள் வாயிலாக மனித வாழ்வுக்கு அடிப்படையான வாழ்வியல் கூறுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை எடுத்தியம்புவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் மக்கள் தம் காதல் நினைவுகளைக் காண முயன்றனர். இயற்கைக் காட்சிகள் பல திறந்தன. அஃறிணை உயிர்களின் செயல்களும் மிகப்பல. எனினும், அவற்றுள் குடும்பத் தொடர்பான கருத்துக்களே தமிழனத்தின் நெஞ்சைக் கவர்ந்தன. அஃறிணை உயிர்களின் வாழ்க்கை மனித குல வாழ்வியல் கூறுகளுக்கு அரண் சேர்ப்பதாகும். இயற்கையை இயற்கையாகப் படைத்தல் எனும் நோக்கமில்லாமலும் மனித வாழ்வியலோடு இணைத்துப் பார்க்கும் போக்கு சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

மக்களிடத்தும் மற்ற உயிர்களிடத்தும் அன்பு கொண்டு வாழ வேண்டும் என்னும் உயரியக் கொள்கையினை அன்றில், புறா, பல்லி, பசு, மான், குரங்கு, யானை போன்ற உயிர்களின் மூலம் மானுடச் சமுதாயத்திற்கு எடுத்து இயம்புகின்றனர். தலைவன், தலைவி அன்பினை வெளிப்படுத்தும் குறியீடுகளாக அஃறிணை உயிர்கள் காணப்படுகின்றன.

## குறுந்தொகைப் பாடல்களில் அஃறிணை உயிர்

குறுந்தொகைப் பாடல்கள் பெரும்பாலும் தலைவனுடைய பண்புகளுக்கு அரண் செய்யும் வகையில் அஃறிணை உயிர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பொருளை முன்னிட்டும் பரத்தையரை முன்னிட்டும் தலைவியை, தலைவன் பிரிந்து செல்லும் போது இயற்கை காட்சிகளில் தன் காதல் இயல்பினை இணைத்துக் காணும் அளவிற்கு அஃறிணை உயிர்களின் வாழ்வும் மனித இயல்புகளும் இயைந்து செல்கின்றன.

"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து
அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

# மானுட வாழ்வியலுக்கு அ.்.றிணை உயிர்கள் கற்பிக்கும் வாழ்வியல் நெறி

*முனைவர் ரெ.மலர்விழி, உதவிப்பேராசிரியை, தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி.

## முன்னுரை

படைப்பாளர்களின் முக்கிய நோக்கமாக இருப்பது நமது படைப்பு வழியாக மனித வாழ்வியலை வடித்தெடுப்பதே ஆகும். வாழ்வியல் என்பது மக்களின் பழக்க வழக்கம், நம்பிக்கை, ஆண் - பெண் உறவு, சமுதாய அமைப்பு, வாழ்க்கைப் போராட்டம், கல்வி, அரசியல், பொருளியல் என எண்ணற்ற களங்களை உள்ளடக்கியது. இயந்திரத்தனமான வாழ்க்கையில் தொலைந்து போன இன்றைய சமுதாயத்தினர் சங்க கவிஞர்களின் இயற்கை மீதான பார்வை, பாடல்களை வாசிக்கும் பல புதிய பரிமாணங்களை விட்டுச் செல்லக் கூடியதாகவே இருக்கின்றது. இந்நிகழ்வுகள் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமையும் வகையில் அறிவுறுத்துகின்ற பணியினை இலக்கியங்கள் செய்து வருகின்றன. அ.்.றிணை உயிர்கள் வாயிலாக மனித வாழ்வுக்கு அடிப்படையான வாழ்வியல் கூறுகள் எவ்வாறு காணப்படுகின்றன என்பதை எடுத்தியம்புவதே இவ்வாய்வு கட்டுரையின் நோக்கமாகும்.

தமிழ் மக்கள் தம் காதல் நினைவுகளைக் காண முயன்றனர். இயற்கைக் காட்சிகள் பல திறந்தன. அ.்.றிணை உயிர்களின் செயல்களும் மிகப்பல. எனினும், அவற்றுள் குடும்பத் தொடர்பான கருத்துக்களே தமிழனத்தின் நெஞ்சைக் கவர்ந்தன. அ.்.றிணை உயிர்களின் வாழ்க்கை மனித குல வாழ்வியல் கூறுகளுக்கு அரண் சேர்ப்பதாகும். இயற்கையை இயற்கையாகப் படைத்தல் எனும் நோக்கமில்லாமலும் மனித வாழ்வியலோடு இணைத்துப் பார்க்கும் போக்கு சங்க இலக்கியங்களில் காணப்படுகின்றது.

மக்களிடத்தும் மற்ற உயிர்களிடத்தும் அன்பு கொண்டு வாழ வேண்டும் என்னும் உயரியக் கொள்கையினை அன்றில், புறா, பல்லி, பசு, மான், குரங்கு, யானை போன்ற உயிர்களின் மூலம் மானுடச் சமுதாயத்திற்கு எடுத்து இயம்புகின்றனர். தலைவன், தலைவி அன்பினை வெளிப்படுத்தும் குறியீடுகளாக அ.்.றிணை உயிர்கள் காணப்படுகின்றன.

## குறுந்தொகைப் பாடல்களில் அ.்.றிணை உயிர்

குறுந்தொகைப் பாடல்கள் பெரும்பாலும் தலைவனுடைய பண்புகளுக்கு அரண் செய்யும் வகையில் அ.்.றிணை உயிர்கள் காட்சிப்படுத்தப்பட்டுள்ளன. பொருளை முன்னிட்டும் பரத்தையரை முன்னிட்டும் தலைவியை, தலைவன் பிரிந்து செல்லும் போது இயற்கை காட்சிகளில் தன் காதல் இயல்பினை இணைத்துக் காணும் அளவிற்கு அ.்.றிணை உயிர்களின் வாழ்வும் மனித இயல்புகளும் இயைந்து செல்கின்றன.

"ஞாயிறு பட்ட அகல்வாய் வானத்து

அளிய தாமே கொடுஞ்சிறைப் பறவை

# கருப்பொருளில் நெய்தல்

ச.முரளி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி, தமிழ்நாடு, இந்தியா.

## நோக்கம்

சங்க இலக்கிய அகநூல்களில் நெய்தல் நிலத்தின் சிறப்புக்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கலைச்சொற்கள்

அவிழ் - செந்நெல் - சுறா - நீர்நாய் - ஞாழல் பூ - தாழம்பூ - புன்னைப் பூக்கள் - பேதை - முண்டகம் - வம்ப நாரை - வெந்நிறக் குருகு - புனைமரம்.

## முன்னுரை

நெய்தல் நிலம் கடலும், கடல் சார்ந்த பகுதியும் குறிக்கும் நுளையர், நுளைச்சியர், சேர்ப்பன், துறைவன் என்னும் பெயர்கள் இந்நிலத்து உயர்குடி மக்களையும் பொதுமக்களையும் குறிப்பிடுவதாகக் கூறலாம். இப்பெயர்கள் தண்ணந்துறைவன் விரிநீர்ச் சேர்பன் என இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பரதவர் என்ற சொல்லும் காணப்படுகிறது. இவர்கள் தற்காலத்தில் மீனவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மீன்பிடித்தல் இங்கு முக்கியத் தொழிலாகும். கடலில் மீன் பிடிக்கச் செல்வது துயரமிகுந்த வாழ்க்கையாகக் கருதப்பட்டது. இல்லத்தில் இருந்த பெண்கள் மீன் பிடிக்கச் சென்ற ஆடவர்கள் திரும்பி வரும்வரை நிம்மதியற்றிருப்பர். இதனால் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் இம்மக்களின் ஒழுக்கமாகக் (உரிப்பொருள்) கூறப்படுகின்றது. உப்பும் இங்கு தயார் செய்யப்பட்டது. இரங்கல் என்பதற்கு மிகுந்த கவலை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. நெய்தலை அடுத்து மருத நிலம் இயல்பாக அமைந்திருந்தது. நெய்தலில் கிடைத்த மீனும் உப்பும் நெல்லுக்கு மருத நிலத்தில் விற்கப்பட்டன. கடற்பகுதியில் பிடித்த மீனையும் தயாரித்த உப்பையும் விற்கும் தொழிலே இங்குச் சிறப்புடையது. மீன்களைப் பெண்கள் விற்று வந்தனர்.

## நெய்தல் நில விலங்குகள்

நெய்தல் நில விலங்காக சுறா திகழ்கின்றது. எனினும் பல விலங்குகள் நெய்தல் நிலக் காட்சியில் அறியமுடிகின்றது.

**கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்**
**துணைச்சுறா வழங்கலும் வழங்கும்**
**(நற்.67)**

என்ற பாடலில் செழுமையான கிரணங்களை உடைய ஆரிய மண்டிலம் பெரிய மலையிடைச் சென்று மறையயாரும் இல்லாமல் கடல்துறை தனிமைப்பட்டுள்ளது. இறால்மீனை அருந்தி எழுந்த கரியகாலை உடைய வெள்ளியநாரைகள் வெள்ளிய உப்புக் குவியலின் மேல் அரிய சிறகுகளை வீசி பறந்து சென்று கரையிலுள்ள கரிய கிளைகளை உப்புக் குவியலின் மேல் அரிய சிறகுகளை வீசி பறந்து சென்று கரையிலுள்ள கரிய கிளைகளை உடைய புன்னை மரங்களிலே தங்குதல் கொண்டன. மேலும் திரண்ட தண்டினை உடைய சிறந்த நெய்தல் மலர்கள் மறையும் வண்ணம் நீர்ப் பெருக்கெடுத்து ஓடும் கழியின் கண்ணே துணையோடு சுறாமீன் இயங்குதலும் செய்யும். மேலும் அவ்விடத்தில் ஒளிமிக்க விளக்குகளை எடுத்துக் கொண்டு எம்மைச் சார்ந்த அனைவரும் 'மீன் வேட்டையாடச் சென்று விட்டனர்' என்பதிலிருந்து கடல் வாழ் சுறாவை அறிய முடிகின்றது.

**கோட்டு மீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்**
**வெள் இறாக் கனவும் நள்ளென் யாமத்து**

# கருப்பொருளில் நெய்தல்

ச.முரளி
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி, தமிழ்நாடு, இந்தியா.

## நோக்கம்

சங்க இலக்கிய அகநூல்களில் நெய்தல் நிலத்தின் சிறப்புக்களை எடுத்துரைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கலைச்சொற்கள்

அவிழ் - செந்நெல் - சுறா - நீர்நாய் - ஞாழல் பூ - தாழம்பூ - புன்னைப் பூக்கள் - பேதை - முண்டகம் - வம்ப நாரை - வெந்நிறக் குருகு - புனைமரம்.

## முன்னுரை

நெய்தல் நிலம் கடலும், கடல் சார்ந்த பகுதியும் குறிக்கும் நுளையர், நுளைச்சியர், சேர்ப்பன், துறைவன் என்னும் பெயர்கள் இந்நிலத்து உயர்குடி மக்களையும் பொதுமக்களையும் குறிப்பிடுவதாகக் கூறலாம். இப்பெயர்கள் தண்ணந்துறைவன் விரிநீர்ச் சேர்பன் என இலக்கியங்களில் கூறப்பட்டுள்ளன. பரதவர் என்ற சொல்லும் காணப்படுகிறது. இவர்கள் தற்காலத்தில் மீனவர்கள் என்று அழைக்கப்படுகின்றனர். மீன்பிடித்தல் இங்கு முக்கியத் தொழிலாகும். கடலில் மீன் பிடிக்கச் செல்வது துயரமிகுந்த வாழ்க்கையாகக் கருதப்பட்டது. இல்லத்தில் இருந்த பெண்கள் மீன் பிடிக்கச் சென்ற ஆடவர்கள் திரும்பி வரும்வரை நிம்மதியற்றிருப்பர். இதனால் இரங்கலும் இரங்கல் நிமித்தமும் இம்மக்களின் ஒழுக்கமாகக் (உரிப்பொருள்) கூறப்படுகின்றது. உப்பும் இங்கு தயார் செய்யப்பட்டது. இரங்கல் என்பதற்கு மிகுந்த கவலை எனப் பொருள் கொள்ளப்படுகின்றது. நெய்தலை அடுத்து மருத நிலம் இயல்பாக அமைந்திருந்தது. நெய்தலில் கிடைத்த மீனும் உப்பும் நெல்லுக்கு மருத நிலத்தில் விற்கப்பட்டன. கடற்பகுதியில் பிடித்த மீனையும் தயாரித்த உப்பையும் விற்கும் தொழிலே இங்குச் சிறப்புடையது. மீன்களைப் பெண்கள் விற்று வந்தனர்.

## நெய்தல் நில விலங்குகள்

நெய்தல் நில விலங்காக சுறா திகழ்கின்றது. எனினும் பல விலங்குகள் நெய்தல் நிலக் காட்சியில் அறியமுடிகின்றது.

> **கணைக்கால் மாமலர் கரப்ப மல்குகழித்**
> **துணைச்சுறா வழங்கலும் வழங்கும்**
> **(நற்.67)**

என்ற பாடலில் செழுமையான கிரணங்களை உடைய ஆரிய மண்டிலம் பெரிய மலையிடைச் சென்று மறையயாரும் இல்லாமல் கடல்துறை தனிமைப்பட்டுள்ளது. இறால்மீனை அருந்தி எழுந்த கரியகாலை உடைய வெள்ளியநாரைகள் வெள்ளிய உப்புக் குவியலின் மேல் அரிய சிறகுகளை வீசி பறந்து சென்று கரையிலுள்ள கரிய கிளைகளை உப்புக் குவியலின் மேல் அரிய சிறகுகளை வீசி பறந்து சென்று கரையிலுள்ள கரிய கிளைகளை உடைய புன்னை மரங்களிலே தங்குதல் கொண்டன. மேலும் திரண்ட தண்டினை உடைய சிறந்த நெய்தல் மலர்கள் மறையும் வண்ணம் நீர்ப் பெருக்கெடுத்து ஓடும் கழியின் கண்ணே துணையோடு சுறாமீன் இயங்குதலும் செய்யும். மேலும் அவ்விடத்தில் ஒளிமிக்க விளக்குகளை எடுத்துக் கொண்டு எம்மைச் சார்ந்த அனைவரும் 'மீன் வேட்டையாடச் சென்று விட்டனர்' என்பதிலிருந்து கடல் வாழ் சுறாவை அறிய முடிகின்றது.

> **கோட்டு மீன் வழங்கும் வேட்டமடி பரப்பின்**
> **வெள் இறாக் கனவும் நள்ளென் யாமத்து**

I.S.BN-978-81-909464-8-3

# 77. பிரசாதத்தில் பாதம் பதிக்கும் பெருமாள்



**செ.நந்தினி**
உதவிப்பேராசிரியர்
தமிழ்உயராய்வுத்துறை
சிதம்பரம்பிள்ளை மகளிர்க் கல்லூரி
மண்ணச்சநல்லூர்

**முன்னுரை**

பஞ்சபூத திருத்தலங்களில் ஒன்றான திருவண்ணாமலை சிவவழிபாட்டுக்குச் சிறப்புக்குரியது. இதேபோல் தமிழ்நாட்டில் இன்னொரு திருவண்ணாமலையும் இருக்கிறது. இது பெருமாள் தரிசனத்தால் புகழ்பெற்று வருகிறது. விருதுநகர் மாவட்டம் ஸ்ரீவில்லிப்புத்தூர் அருகே இந்த திருவண்ணாமலை அமைந்துள்ளது. இங்கு சீனிவாசப் பெருமாள் கோவில் கொண்டுள்ளார். விருதுநர் மாவட்டம் சீவில்லிபுத்தூர் அருகே இந்தத் திருவண்ணாமலை அமைந்துள்ளது. இங்குச் சீனிவாசப் பெருமாள் கோவில் கொண்டுள்ளார். திருப்பதி வெங்கடாசலபதிக்குச் செலுத்த வேண்டிய பிரார்த்தனைகளை இவருக்குச் செலுத்தி மனமுருக வேண்டி பக்தர்கள் வழிபடுவதால் இதை இப்பகுதி மக்கள் தென்திருப்பதி என்றும் அழைக்கின்றனர்.

**தலவரலாறு**

சுமார் 800 ஆண்டுகளுக்கு முன் நெல்லை மாவட்டத்தைச் சேர்ந்த பக்தர் ஒருவர் வெங்கடாசலபதியைத் தரிசித்து அருள்பெறுவதற்காகத் திருப்பதி நோக்கிப் பாதயாத்திரை மேற்கொண்டார். வழியில் சீவில்லிபுத்தூர் அருகே ஒரு மடத்தில் தங்கியிருந்தார். அங்கு அயர்ந்து தூங்கும் நேரத்தில், அவரது உடைமை அனைத்தும் திருட்டு போனது. கையில் சிறிதும் காசு மிஞ்சாததால், உணவு வாங்க வழியின்றிப் பட்டினியில் வாடினார். அங்கு இருந்தவாறே திருப்பதி ஏழுமலையானை மனதில் நினைத்துத் தன் நிலைமையைக் கூறி வேண்டினார். களைப்பில் தூங்கியும் போனார்; அவர் கனவில் வெங்கடாசலபதி தோன்றி, என்னைத் தரிசிக்க வேண்டும் என்று, திருப்பதி வரை

# முத்தொள்ளாயிரத்தில் மலர்கள்

**முனைவர் சி.பிரபாகரன்**
**உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி,**
**புத்தனாம்பட்டி, தமிழ்நாடு, இந்தியா**

முத்தொள்ளாயிரம் என்னும் நூல் புறத்திரட்டு என்னும் தொகுப்பு நூலில் இடம்பெற்றுள்ளது. முத்தொள்ளாயிரத்தில் கடவுள் வாழ்த்தோடு 109 பாடல்களே கிடைத்துள்ளன. இது அகமும், புறமும் பற்றி பாடப்பெற்றுள்ளது. மூன்று தொள்ளாயிரம் பாடல்களைக் கொண்டு அமைந்தமை 'முத்தொள்ளாயிரம்' என்ற தலைப்பு இடம்பெற்றது. இந்நூலில்,

| | |
|---|---|
| கடவுள் வாழ்த்து | 01 |
| சேரன் குறித்து | 21 |
| சோழன் குறித்து | 30 |
| பாண்டியன் குறித்து | 57 |
| ஆக | 109 |

பாடல்கள் இடம்பெற்றுள்ளன. இது கி.பி.5க்கும் 8க்கும் இடைப்பட்டக் காலம் என்பது குறிப்பிடத்தக்கது.

சேர, சோழ, பாண்டியரை மூவேந்தர் என அழைக்கிறோம். வேந்தர் என்ற சொல் வேய்ந்தோர் என்பதன் மரூஉ என்பர். தலையில் முடிவேய்ந்தோர் என்றும், தமக்கெனக் கொண்ட மரபுடன் மலர் வேய்ந்தோர் என்றும் உரைப்பர். சோழனுக்கு 'ஆர்' மாலையும், சேரனுக்குப் பனம்பூ மாலையும் அடையாள மாலைகள் ஆகும். இதனைத் தொல்காப்பியர்.

> போந்தே வேம்பே ஆர் என வரூஉம்
> மாபெருந் தானையர் மலைந்த பூவும்
> (நூ.1006)

என்று தம் புறத்திணையில் சுட்டுகிறார். சேர, சோழ, பாண்டிய மன்னர்களின் சிறப்புப் பெயர்கள் பின்வருமாறு கூறப்படுகிறது.

**சேரன்**

வஞ்சி வேந்தன், குடக்கோ, குட்டுவன், குடகன், கோதை, உதியன், சேரலதன், வானவரம்பன், பூழியன், கேரளன், வில்லவன், மலையன், உதியன், கோச்சேரன், கொல்லி வெற்பன்.

**சோழன்**

சென்னி, வளவன், செம்பியன், நேரியன், சென்னி, கிள்ளி, அபயன், பொன்னித்துறைவன், சூரியன், கேசவன், புரவலன், கண்ணியன்.

**பாண்டியன்**

செழியன், வழுதி, மீனவன், பஞ்சவன், கௌரியன், மாறன், தென்னவன், தமிழ்நாடன், வழுதி, குமரிச்சேர்ப்பன், வேம்பின் கண்ணிக்கோ.

**மலர்கள்**

மலர்கள் என்பது செடி, மரம், கொடி ஆகிய தாவர வகையின் ஒரு உறுப்பாகும். மலரை பூ என்றும் நறுவீ என்றும் அழைப்பார்கள். இவை ஒவ்வொரு தாவரத்திலும் பல்வேறு வண்ணங்களில் இருக்கும். இவற்றில் ஒரு சில மலர்களில் தேன் இருக்கும். அந்தத் தேனைக் குடிக்க வண்டுகள் வரும். சில மலர்கள் நாற்றம் (நறுமணம்) மிகுந்தவை. சில மலர்கள் இரவிலும் சில மலர்கள் பகல் பொழுதிலும் மலரும். இரவில் மலரும் மலர்கள் பெரும்பாலும் வெண்மை நிறம் உடையனவாகவும் மணம் மிகுந்தவையாகவும் இருக்கும். ஏனெனில் இரவில் வண்டுகளுக்கு தன் இருப்பிடத்தைக் காட்டவே அவை அவ்வாறு உள்ளன.

# உவமை எடுத்துக்காட்டுகள் : ஓர் ஆய்வு

முனைவர் சி.பிரபாகரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி, தமிழ்நாடு, இந்தியா

உவமை என்பது ஒரு பொருளோடு மற்றொரு பொருளுக்கு உள்ள ஒப்புமைத் தோன்றக் கூறுவதாகும். உவமை, வினை, பயன், மெய், உரு ஆகிய நான்கு வகையினதாக அமையும்.

**வினை பயன்மெய்உ என்ற நான்கே**
**வகைப்பெற வந்த உவமத் தோற்றம்**

என்று கூறுவர் தொல்காப்பியர். உவமை உவமிக்கப்படும் பொருளைவிட உயர்ந்ததாக இருக்க வேண்டும். அப்பொழுதுதான் சொல்லும் பொருள் சுவை கூடி நிற்கும்.

**ஒன்று பவும் பொருளோடு பொருள் புணர்ந்து**
**ஒப்புமைதோன்றச் செப்புவது உவமை**

என்று தண்டியலங்காரம் உவமைக்கு இலக்கணம் கூறுகிறது.

கவிஞனின் வெளியீட்டு முறைக்கு தெளிவும் ஒளிவும் சேர்ப்பதும் பயில்வோரின் நெஞ்சங்களை எளிதில் ஈர்ப்பதும் கவிஞன் கண்ட காட்சியை **''மற்றவர் அவரது கற்பனை எல்லைக்குள் மிக நெருங்கிச் சென்று உள்ளபடி கண்டுகொள் துணைக்கருவியாய் இருப்பது உவமையாகும்''** என்று கூறுவர்.

சங்கப் பாடல்களிலும் ஏறத்தாழத் தொண்ணூறு விழுக்காடு பிற அணிகளும் இடம்பெற்றுள்ளன என்றாலும் அவற்றுள் பல உவமையின் வழிப்பட்டனவேயாகும் என்ற கருத்தும் கொள்ளற்குரியது.

உவமைதோன்ற நிலைக்களன்களாக ஒரு பொருளின் சிறப்பு, நலன் அதன்மேல் கொண்டுள்ள பேரன்பும், அதன் வலிமை ஆகியவை அமைந்துள்ளன. இதனை,

**சிறப்பே நலனே காதல் வலியோடு**
**அந்நாற் பண்பும் நிலைக்களம் என்ப**

என்கிறார் தொல்காப்பியர். எடுத்துக் கொள்ளுகின்ற பொருள் தாழ்ந்ததாக இருந்தாலும் அதனையும் சேர்த்து ஐந்தாகக் கொள்ளலாம்.

## ஐங்குறுநூற்று நெய்தல் உவமைகள்

ஐங்குறுநூற்று நெய்தல் திணையில் இயற்கை உவமைகளாக எட்டு முத்தான உவமைகள் இடம்பெற்றுள்ளன.

தலைவியின் கண்கள் நெய்தல் போலத் தகைபெற்று உடையன என்று உவமையாகக் கூறப்பட்டுள்ளன. இதனை,

**வைகறை மலரும் நெய்தல் போலத்**
**தகை பெரியதுடைய காதலிகண்ணே(ஐங். 188)**

என்ற பாடல் வரிகளால் அறியலாம். மேலும் தலைவியின் கண்களை மீண்டும் மற்றொரு பாடலில்,

**பூப்போல் உண்கண் மரீஇய (ஐங். 101)**

என்ற பாடல் வரிகளால் இயற்கை உவமை இடம்பெற்றுள்ளதை அறியலாம்.

தலைவி, தலைவனை நினைத்து துயரப்படுகிறாள். அவளது மேனிப்பசலை கொண்டது. இதைக்கூற,

**துதிக்கால் அன்னம் துணை செத்து மிதிக்கும்**
**(ஐங். 106)**

என்ற உவமை கையாளப்பட்டுள்ளது. இது காதலை நிலைக்களனாகக் கொண்டு அமைகின்றது.

# மு.மேத்தாவின் ஆகாயத்திற்கு அடுத்த வீடு கவிதைத் தொகுப்பில் சமுதாயச் சிந்தனைகள்

**முனைவர் சி.பிரபாகரன்**
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி,
திருச்சிராப்பள்ளி - 621 007, தமிழ்நாடு, இந்தியா

மு.மேத்தா இலக்கிய உலகில் புதுமைகள் செய்து ஒவ்வொரு காலத்திலும் தனித்துவமிக்க கவிதைகளை வழங்கித் திகழ்பவரில் ஒருவர். இவர் கவிஞர், நாவலாசிரியர், திரைப்படப் பாடலாசிரியர், இலக்கியவாதி, திறனாய்வாளர் என்று பன்முகம்கொண்டவர்.

**கலைச்சொற்கள்**

கையூட்டு -நட்சத்திர விடுதி -லிப்டுகள் - பாழுக்குநீர் இறைத்து-உயிர்த்தெழுதல்- தராசுமுட்கள் -சுருட்டு -தடுமாறும்கணவன்

மு.மேத்தா ' ஆகாயத்துக்கு அடுத்த வீடு' என்ற கவிதை நுலீலுக்கு சாகித்திய அகாடமி விருதை பெற்றார். இவர் இலக்கிய உலகில் புதுக்கவிதை இலக்கியத்தில் தனியிடம் பதித்தவர் எனவே புதுக்கவிதையில் மு.மேத்தா பெற்ற சிறப்புக்குரிய தனித்தன்மைகளை எடுத்தாள்வதே இக்கட்டுரையின் நோக்கம்.

1. நாட்டுப்பற்று
2. உழைப்பும் மதிப்பும்
3. கொடுமைகள் கண்டு துடித்தல்
4. கல்வி
5. கையூட்டு வாங்குவது
6. வரதட்சணைக் கொடுமை

என்று பன்முகப் பார்வையாக இக்கட்டுரை விரித்துரைக்கப்படுகிறது.

## 1. நாட்டுப்பற்று

இந்தியா எனது தாய்நாடு என்று கூறுவதைக் கேள்விப்பட்டருக்கிறோம். 'இந்தியா எனது காதலி' என்று தலைப்பிட்டு கவிதை புனைந்திருப்பது புதுமை கோணம். ஒரு பெண்ணைக் காதலிக்கத் தெரியாதவனுக்கு மண்ணைக் காதலிக்கத் தெரியாது என்ற மேத்தாவின் கருத்து இங்கு நினைவு கொள்ளத்தக்கது. இந்திய மண்ணில் பிறந்து விட்டோம். இந்தியாவைக் காதலித்துத்தான் ஆக வேண்டும் என்றுரைக்கும் வரிகள் மூலம் தெரிவிக்கிறார்.

**காதலித்து உன்னைக்**
**கட்டிக்**
**கொள்ளவில்லை ...**
**கட்டிக்**
**கொண்டதால்தான்**
**காதலித்துக்**
**கொண்டிருக்கிறேன்**[1]

சனநாயகம் விடுதலை சீர்கெட்டு நிற்கும் நிலையைக் காதல் கொண்டதால் கண்டு வருந்துகிறார்.

## 2. உழைப்பும் மதிப்பும்

உழைப்பதும் பாடுபடுவதும் அவனுக்குரிய பெருமை வெளிப்படுவதில்லை. பாடுபடும் பாட்டாளிக்கு கிடைக்க வேண்டிய பெருமையை முதலாளியை சென்று விடுகிறது. 'உழைக்கிறவன், கணக்குப் போட்டு பார்த்தால் உலக்குக் கூட மிஞ்சாது' என்ற பழமொழி உழைப்பவனின் உண்மையான நிலையை வெளிப்படுத்தும்.

நம் தாய்நாட்டிற்காக உயிர் நீத்த மாவீரர்களைப் பற்றி 'தாய்மண்ணே வணக்கம்' என்ற தலைப்பில் கவிதை எழுதும்போது

**இந்தியா என்னும் மொழியில்**
**மொத்தம்**

# செந்தமிழாற்றுப்படையில் தமிழின் சிறப்புகள்

முனைவர் சி.பிரபாகரன்
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி, தமிழ்நாடு, இந்தியா.
முனைவர் மு.சாதிக் பாட்சா
இணைப்பேராசிரியர், தமிழாய்வுத்துறை, ஜமால் முகம்மது கல்லூரி, திருச்சிராப்பள்ளி - 20, தமிழ்நாடு, இந்தியா.

செந்தமிழாற்றுப்படை நூலின் ஆசிரியர் சுந்தரசண்முகனார் ஆவார். இவர் 13.07.1922 அன்று தமிழ்நாடு தென்ஆற்காடு மாவட்டத்தில் கடலூர் அருகே புதுவண்டி பாளையத்தில் பிறந்தார். சுந்தரம் அன்னபூரணி அம்மாள் பெற்றோர்கள் ஆவார். இவர் எழுதிய முதல் நூல் வீடும் விளக்கும் ஆகும். சிறுகதைகள், தூய தமிழ் முக்கியத்துவம், பொங்கல் பாராட்டும் பாடல்கள், குழந்தைப் பாடல்கள், மரணம் பாடல்கள், உரைநடைப் புத்தகங்கள், திருக்குறள் சார்ந்த ஆராய்ச்சி படைப்புகள், இலக்கிய விமர்சனம் போன்ற படைப்புகளை வெளியிட்டுள்ளார். இயற்கைக் கவிஞர், தமிழ் அறிஞர், திருக்குறள் நெறித் தோன்றல், தமிழ் பேரவை செம்மல் போன்ற விருதுகள் பெற்றுள்ளார். வாழும் வழி என்ற நூல் அண்ணாமலைப் பல்கலைக்கழகம் முன் பல்கலைக்கழகப்படிப்பு பரிந்துரைக்கப்பட்டன. திருமுருகாற்றுப்படை தெளிவுரை மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் எம்.ஏ திட்டங்களுக்காக விதிக்கப்பட்டிருந்தது.

## நோக்கம்

தமிழருக்குத் தம் தாய்மொழியாம் தமிழ் மொழியில் உள்ள உணர்ச்சியைத் தூண்டி அதன் பால் அவர்தம் ஆர்வத்தை எழுப்பி அதனைக் கசடறக் கற்றுப்போற்றி வளர்க்க இந்நூல் துணை புரியும் என்று விழிப்புணர் ஊட்டுவதே இக்கட்டுரையின் நோக்கம் ஆகும்.

## கலைச்சொற்கள்

நனிசிறப்பு-கழறுவாய் - கன்னற்சுவை - இமயவரம்பன் - கனகவிஜயர் - சுமைக்கல் - சேரன் - நெல்லி, மோசிகீரன் - வாடாமலர் - நயந்தனர்.

## ஆற்றுப்படை

ஆற்றுப்படை என்பது ஒருவரிடம் சென்று நன்மை பெற்று வரும் ஒருவன் வழியில் எதிர்ப்படும் தன்னொத்த மற்றொருவனை நோக்கி யான் இன்னாரிடம் சென்று இன்னின்ன பொருள்கள் பெற்று வருகிறேன். நீயுஞ் சென்றால் பெறலாம் என்ற மொழிந்து அவனை அரிடம் வழிப்படுத்தி அனுப்புவதாகும். ஆறு - வழி, படை - படுத்தல். ஆற்றுப்படை இலக்கணம் பற்றி தொல்காப்பியர் பின்வருமாறு கூறுகிறார்.

> "கூத்தரும் பாணரும் பொருநரும் விறலியும்
> ஆற்றிடைக் காட்சி யுறழத் தோன்றிப்
> பெற்ற பெருவளம் பெறஅர்க் கறிவுறீ இச்
> சென்றுபய னெதிரச் சொன்ன பக்கமும்"

சங்க இலக்கியங்களாகிய பத்துப்பாட்டு, புறநானூறு போன்ற நூற்களிலும் ஆற்றுப்படைக் கருத்தமைந்த தனிச்செய்யுட்கள் உண்டு. ஆயினும் பத்துப்பாட்டுள் உள்ள ஐந்து ஆற்றுப்படை நூல்களே பெருவாரியாக மக்களால் அறியப்பட்டு வருகின்றன. அவை திருமுருகாற்றுப்படை, பொருநராற்றுப்படை, சிறுபாணாற்றுப்படை, பெரும்பாணாற்றுப் படை, கூத்தராற்றுப்படை (மலைபடுகடாம்) ஆகியவை ஆற்றுப்படை நூல்களாகும்.

## செந்தமிழாற்றுப்படை

தமிழ் கற்ற ஒரு தமிழன், தமிழ் கற்காத மற்றொரு தமிழனை, தமிழ் கற்றுத் தாய் நாட்டிற்குத் தொண்டு புரிவதற்காகத்

ISBN: 97893-80394-71-9

# பண்டைய சமுதாயத்தில் அறம்

முனைவர். கி. கீதா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

தனி மனிதனின் தொகுதியே சமுதாயம் ஆகும். மனிதன் இயற்கையிலேயே கூடி வாழும் இயல்புடையவன். அதனால் தான் "மனிதன் ஒரு சமூகப் பிராணி" என்பர் அரிஸ்டாட்டில். மனிதன் தேவைக்காகவும், நலத்திற்காகவும், வாழ்க்கை வசதிக்காகவும், மற்றவர்களைச் சார்ந்து அவர்களோடு கூடி வாழ்கின்றான்.

தனிமனிதன் மேற்கொள்ளும் அறவாழ்வு எப்படியிருக்கவேண்டும். சமுதாயத்தில் அனைவருடனும் இணைந்தாற்றும் அறவாழ்வு எப்படியிருக்க வேண்டும். என்பதற்குரிய விதிமுறைகளைத் தரும் நூலாக விளங்குவது தொல்காப்பியம். தொல்காப்பியம் தனி மனிதனின் அறத்தை அகப்பொருளிலும், சமுதாய அறத்தைப் புறப்பொருளிலும், வகைப்படுத்துகின்றன. தொல்காப்பியத்தை அடியொற்றிய நிலையிலேயே சங்க இலக்கியத்தில் அறநெறிகள் கூறப்பட்டுள்ளன. சமுதாயத்தில் அங்கமாக விளங்குகின்ற ஒவ்வொரு தனி மனிதனுக்கும் சில நெறிமுறைகளைச் சங்க இலக்கியங்கள் வரையறை செய்கின்றன. அந்நெறி முறைகளைப் போற்றி வாழவேண்டும் என்றும் வலியுறுத்தப்படுகின்றது. உலக நடைமுறைகளை அறிந்து அதன்வழி வாழ்வதற்கு வேண்டிய நற்பண்புகளின் இலக்கணங்களை, ஒன்பது அறநெறிகளைக் கலித்தொகை தொகுத்துரைக்கின்றது. அவை,

- இல் வாழ்க்கையில் இயற்றவேண்டிய அறம் வறியவர்களுக்கு உதவி செய்தல்,
- தன்னை அடைந்தாரைப் பிரியாமையே காத்தலாகிய அறம்,
- மக்கட் பண்பு என்பது உலகவொழுக்கம் அறந்தொழுகுதல்,
- சுற்றஞ்சூழ வாழ்தலே அன்பு நெறியாகும்,
- அறியாதவர் சொற்களைப் பொறுத்துக் கொள்ளுதல் அறிவு எனப்படும்,
- கூறியதை மறவாதிருத்தலே உறவு ஆகும்,
- நிறை எனப்படுவது மறை பிறரறியாமல் ஒழுகுதல்.
- முறை எனப்படுவது நமரெனக் கண்ணோடாது அவர் செய்த குற்றத்திற்கேற்பத் தண்டனையளித்தல்,

ISBN: 978-93-80622-17-0



# தமிழ்மொழியைப் பிறமொழி கலப்பிலிருந்து பாதுகாக்கும் பெட்டகம் - இலக்கணம்

முனைவர்.கி.கீதா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

ஒரு செழுமையான சோலையில் பலவகைப்பட்ட மரங்கள் இருக்கின்றன. இச்சோலையைப் போன்றதே இலக்கிய உலகம். இலக்கிய உலகத்தில் பலவகைப்பட்ட மொழிகள் உண்டு ஒவ்வொரு மொழியிலும் உள்ளத்தை அள்ளும் அழகிய பாடலும்இ உரையும் உண்டு. சிறந்த தாய்மொழிகளின்று பிறந்த சேய்மொழிகள் தனி மொழிகளாகத் தழைத்தலும் உண்டு. இவற்றையெல்லாம் ஆராய்ந்த ஒவ்வொரு மொழியின் தன்மையையும் எழுதிக் காட்டும் நூலே இலக்கணம். அதனை வியாகரணம் என்பார் வடமொழியாளர். இலக்கணம் அமைய பெறாத மொழிகள் வரப்பில்லாத வயல்களை ஒத்தது. பழமையும்இ பண்பும் வாய்ந்த பசுந்தமிழை இலக்கண வரம்புடைய மொழியென்று பாராட்டினார் பரஞ்சோதி முனிவர்.

"கண்ணுதற் பெருங்கடவுளும் கழகமோ டமர்ந்து
பண்ணுறத் தெரிந்தாய்ந்த இப்பசுந் தமிழ்ஏனை
மண்ணிடைச் சில இலக்கண வரம்பில மொழிபோல்
எண்ணிடைப் படக்கிடந்ததா எண்ணவும் படுமோ"

என்று இறுமாந்துரைத்தார்.

## தமிழ் மொழியின் இலக்கண சிறப்புகள்

ஒரு மொழியின் பண்புகளை அதன் இலக்கணம் நன்கு பாதுகாக்கும். என்னும் உண்மைக்குத் தமிழ் இலக்கணமே சான்று. தொன்று தொட்டுப் பல இனத்தார் தமிழ் நாட்டில் வந்து தமிழரோடு கலந்துள்ளார்கள். அவ்வினத்தாருடன் ஆதியில் ஆரியர் வந்தனார், அவர்கள் மொழியாகிய ஆரியத்துடனும், அதன் பின் வந்த அரேபிய மொழி, பிற்காலத்தில் வந்த ஆங்கிலம் என்று பல மொழிகள் வந்தாலும் தமிழின் நீர்மையைக் கெடுத்துவிடவில்லை. இதற்குக் காரணம் தமிழின் இலக்கணமே. பிறமொழி சொற்கள் தமிழில் வந்து வழங்கலாகாது என்று தமிழ் இலக்கணம் தடை செய்யவில்லை. ஆனால் அச்சொற்கள் தமிழ்க்கோலம் பூண்டு தமிழிலே கலந்து கொள்ளுதல் வேண்டும் என்று விதித்தது. பிற நாட்டான் ஒருவன் தமிழனாகக் கருதப்பட

ISBN: 978-93-80394-77-0



# பண்டைய இலக்கியத்தில் பொருளாதார மேலாண்மை



முனைவர் கி. கீதா,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

பொருளியல் ஓர் அறிவியலாக மலரத் தொடங்கிய காலம் 18 ஆம் நூற்றாண்டாகும். இக்காலத்தில் தோன்றிய அறிஞர் ஆடம்ஸ்மித் என்பவர் பொருளியிலின் தந்தை எனப் போற்றப்பெற்றவர். செல்வத்தைப் பற்றிக் கூறுவதே பொருளியல் என்று பொருளியலுக்கு முதன் முதல் இலக்கணம் வகுத்தவரும் இவரே. இதன்பின் ஜே.எஸ்.மில் என்பார் செல்வத்தின் இயல்பையும் அதன் ஆக்கம், பகிர்வு, துய்ப்பு ஆகியவற்றைப் பேசுவதே பொருளியல் என்றார். எனவே, பொருளியல் செல்வத்தைப் பற்றிய இயல் என்றே கருதப்பட்டது. கார்லைல், ரஸ்கின், டிக்கன்ஸ் போன்றோர் செல்வ ஈட்டம் சுயநலத்தை அடிப்படையாகக் கொண்டது என்றனர். செல்வத்தையும் மக்கள் நலத்தையும் பற்றியதே பொருளியல் என ஆடம்ஸ்மித்துக்குப்பின் மாற்றல் பொருளியலுக்கு இலக்கணம் கூறினார். இதை ஒட்டியே கானன், பிகு போன்றோரும் பொருளியலுக்கு இலக்கணம் கண்டனர்.

பொருளியல் அறிவியலாக மலர்ச்சி பெற்றது 18-ஆம் நூற்றாண்டில்தான். ஆயின், அதற்கு முன்பே நம் முன்னோர்கள் பொருளியல் சிந்தனையில் வல்லவர்களாக வாழ்ந்தனர் என்பதைப் பண்டையத் தமிழ் இலக்கியங்கள் விளக்கிக் காட்டுகின்றன. பொருளைப் பற்றிய கருத்துக்களைத் தமிழ் இலக்கியங்களில் ஆராயப் புகுந்தால் அவை அறவழிப் பொருளையே பெரிதும் வலியுறுத்துகின்றன.

## தமிழ் இலக்கியங்களில் பொருளியல்

மனிதன் உலகில் வாழ்வதற்கும், அவனுடைய தேவைகளை நிறைவு செய்வதற்கும் அவனுக்குப் பொருள் தேவைப்படுகின்றது. தேவை கருதிய வாழ்வில் பொருளும் இடம்பெற்றுவிட்ட நிலையை இலக்கியங்கள் உணர்த்துகின்றன. பிரிவு வகைகளைக் கூறும் தொல்காப்பியர், பொருள் ஈட்டுதற் காரணமாக மேற்கொள்ளும் பிரிவினையும் அவற்றுள் ஒன்றாகக் குறிப்பிடுவர். இதனை,

மேவிய சிறப்பின் ஏனோர் படிமைய
முல்லை முதலாச் சொல்லிய முறையாற்
பிழைத்தது பிழையா தாகல் வேண்டியும்
இழைத்த ஒண்பொருள் முடியவும் பிரிவே (தொல்.பொருள். அகத்.30)

ISBN: 97893-87354-16-6

26

# திருமந்திரத்தில் தனிமனித வாழ்வியல் சிந்தனைகள்

முனைவர் கி. கீதா,
உதவிப் பேராசிரியர்,
தமிழாய்வுத் துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

சமுதாயத்தில் மனிதன் அமைதி, இன்பம் நல்லொழுக்கங்களுடன், பொருள் பொதிந்த தூய வாழ்வு வாழ அகப்பண்பாடு இன்றியமையாததாகின்றது. அத்துடன் மனிதனின் மனம் இறையருளைப் பெறவும், இறை நெறியில் செம்மையாகச் செல்லவும் அகப்பண்பாடே அடிப்படையாக அமைகிறது. எனவே, வாழ்வியலும், இறையியலும், அகப்பண்பாடாகிய தனிமனித ஒழுக்கத்தைப் பொறுத்தே பெரும்பாலும் சிறப்புற முடியும். அதனால் தான் செம்மையான வாழ்வியலை வலியுறுத்தும் நூல்களும், ஆன்ம இன்பத்திற்கான வழிபாட்டினை வலியுறுத்தும் நூல்களும் முதலில் அறிவுறுத்துவது அகம் சார்ந்த பண்பாடாகிய தனி மனித ஒழுக்கங்களேயாகும்.

இயற்கைச் சூழல், காலம், மக்களின் மனநிலை, மரபு இவற்றிற்கேற்ப ஒவ்வொரு நாட்டிற்கும் பண்பாட்டுக் கூறுகள் வேறுபடலாம். ஆனால், உணர்வு சார்ந்த அகப்பண்பாடுகள் பெரிதும் மாறுபடுவதில்லை. அன்பு, மனித நேயம், ஒழுக்கம், விருந்தோம்பல் போன்றவை எல்லா நாடுகளிலும் அடிப்படை அறங்களாக உள்ளன.

திருமூலர், திருமந்திரத்தில் இறை உண்மையைக் கூறி, நிலையாமையை வலியுறுத்தி, அறநெறிகளை வகுத்து, அவற்றின் வழியாகச் சிறந்த வாழ்வியலைப் பெற்று அதன் மடைமாற்றமாக ஞான வாழ்வு பெறலாம் என்று கூறியுள்ளார்.

## அன்புடைமை

அன்பின் முதிர்ச்சியால் இறையாகிய அறிவு விளங்கும். அதாவது, சத்தியாகிய அன்பின் முதிர்வால் சிவமாகிய அறிவு விளங்கும். அன்பு வலையில் அகப்பட்டு, அருளும் இறைவனை ஏத்தினால் ஒளி பெருகச் செய்வான். அன்பில்லாதவர் இறைவனை அடைய வழியறியாது வருந்துவர். கருணையுடைய இறைவனிடம் அன்பு பின்னிக் கிடக்க வேண்டும். உலகப்

# இலக்கியத்தில் வான்மழையும் அறிவியலும்

ISBN - 978-93-80394-99-2

முனைவர்.கி.கீதா
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி.*

தமிழர் வாழ்வியலில் இலக்கியமும் அறிவியலும் இரண்டறப் பற்றிப் படர்ந்து ஆல் போல் விழுதெறிந்த விருட்சமாய் அமைந்துள்ளன. அறிவியல் புறவாழ்வுக்குத் தேவை. இலக்கியம் அகவாழ்வு வளர்ச்சிக்குத் தேவை. இலக்கியத்தின் மூலம் அறிவியல் சிந்தனையை விதைக்கவும் செய்தனர் புலவர்பெருமக்கள். அரசனுக்கு அறத்தை அறிவுத்தும் போதும் இயற்கையைப் பேண வேண்டும் என்று வலியுறுத்தவும் தயங்கவில்லை. தமிழ் இலக்கியம் அறவியலையும் பேசுகிறது. அறிவியலையும் பேசுகிறது.

## இலக்கியங்களில் மழை வளச் சிறப்பு

மழை பொழியும் போதே அதனைச் சேர்த்து வைக்க வேண்டும் என்று புறநானூற்றுப் புலவர் குடபுலவியனார், பாண்டியன் நெடுஞ்செழியனுக்கு அறிவுறுத்துகிறார். அப்படிச் செய்வதே ஆட்சியாளருக்கு அழகு. அத்தகையவனையே மக்கள் நல்லரசனாகப் போற்றுவர்

"நீர்இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவின் பிண்டம்
உணவு எனப்படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலனும் புணரியோர் ஈண்டு
உடம்பும் உயிரும் படைத்திசி னோரே
வித்தி வான்நோக்கும் புன்புலம் கண்அகன்
வைப்பிற்று ஆயினும் நண்ணி ஆளும்
இறைவன் தாட்கு உதவாதே அதனால்
அடுபோர்ச் செழிய இகழாது வல்லே
நிலன் வெளி மருங்கில் நீர்நிலை பெருகத்
தட்டோர் அம்ம இவண் தட்டோரே
தள்ளாதோர் இவண் தள்ளா தோரே" [புறம் 18: 18 - 30]

இப்பாடலின் மூலம் குடபுலவியனார் ஒரு வேளாண் மேதையாக விளங்கியிருப்பார் என்பது புலனாகிறது. அடுத்த தலைமுறை சமுதாயத்திற்குப்

# சூழல் பாதுகாப்பில் கவிஞர் தமிழேந்தி கவிதைகள்

ISBN - 978-93-80394-99-2

என்.ஆர்.சக்திவேல்
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி , புத்தனாம்பட்டி.

## முன்னுரை

உலகில் வாழும் மனிதரெல்லாம் ஒவ்வொரு குறிக்கோளுக்காகக் கால நதியில் நீந்துகின்றோம். நீந்துகின்ற மனிதன் காலத்தில் சூழலுக்கு ஏற்ப தன்னை அதற்குள் அர்த்தப்படுத்திக்கொள்ளுகின்றான். நிலையான வாழ்க்கை வாழ நினைக்கும் ஒவ்வொரு மனிதனும் சமூகம் சார்ந்த கட்டுக்குள் சில விழுமியங்களைக் கடைபிடிக்கின்றான். பண்பாடு, நாகரிகம், ஒழுக்கம், அறவியல் என வாழும்போது எதிர்காலச் சந்ததிகளுக்கு உதாரண புருசனாய் எடுத்துக்காட்டப்படுகின்றான். அதுபோலவே அவன் படைக்கின்ற இலக்கியமும் சமூக நதியில் இருக்கின்ற கழிவுகளை, அவலங்களை, அழகியலை, இறையாண்மைச் சிந்தனைகளை, இயற்கை இரகசியங்களைச் சமகாலக் கண்ணோட்டத்தோடு படைத்துக்காட்ட விரும்புகின்றான். அவன் எழுத்தின் வழி எடுத்து வைக்கின்ற அத்துணையும் மனித சமூகத்திற்கே ஆழங்கால்பட்ட பயனைத் தருகின்றது. கவிஞர் தமிழேந்தி அவர்கள் பொதுவுடமைச் சிந்தனைவாதி. அவர் எழுதிய 'தமிழேந்தி கவிதைகளில்' சூழல் மேம்பாட்டைப் போற்றவும், சூழல் பேணவும் நீரையும், நிலத்தையும் மீட்டெடுக்கவும் மரங்களை வளர்த்து மாசினைப் போக்கவும் விலைமதிப்பற்ற உயிர்காக்கும் மருந்தான நீரை வெளிநாட்டுக்கு விலை பேசாது இருக்கவும் அவரது கவிதை ஒவ்வொரு தமிழருக்கும் ஒரு செங்கோலாய் இருந்து வழிநடத்துவதைச் சொல்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## நிலமேம்பாடும் நீர்வளமும் உணவின் முதல் கொள்கலன்

பாண்டியன் தலையாலங்கானத்துச் செருவென்ற நெடுஞ்செழியனைக் குடபுலவியனார் வாழ்த்தியபோது,

'நீர் இன்று அமையா யாக்கைக்கு எல்லாம்
உண்டி கொடுத்தோர் உயிர் கொடுத்தோரே
உண்டி முதற்றே உணவுகள் பிண்டம்
உணவெனப் படுவது நிலத்தோடு நீரே
நீரும் நிலமும் புணரியோடு ஈண்டு

ISBN - 978 - 81 - 908592 - 2 - 6



# சங்க காலப் பெண்பாற் புலவர்கள்

பெ. வனிதா, எம்.ஏ., எம்.ஃபில்.,
உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை,
நேரு நினைவு கல்லூரி,
புத்தனாம்பட்டி.

## முன்னுரை :

பழந்தமிழர் பண்பாட்டின் நிலைக்களனாய் அமைந்தவை சங்க கால இலக்கியங்களே இவை அள்ள அள்ள குறையாத அமுத சுரங்கம். தெவிட்டாத தேன் இன்பம் ஆணாதிக்க வரம்பும்இஅதிகார சூழலும் நிறைந்த சமுதாயத்தில் ஆண்களுக்கு நிகராகப் பெண்களும் கல்வி அறிவில் சிறந்து விளங்கினர் என்பதற்கான சான்றுகளே இவர்தம் படைப்புகள் ஆகும் சங்ககால பெண்புலவர்களது படைப்புகளில் காதல்இகாதலின் தனிமைத்துயரம்,தலைவன் மேல் கொண்ட நம்பிக்கை இதன்னைவிட்டு பிறரைநாடிச் சென்றாலும் அவருக்காகக் காத்திருக்கும் மனப் பாங்கு ஆகியவற்றை எடுத்து இயம்பும் வண்ணம் இக்கட்டுரை படைக்கப்பட்டுள்ளது.

## அகழ் அகமும் புறமும் :

சங்க இலக்கியங்கள் வாழ்வினை அகமும் புறமும் என இரண்டாக வகுத்துப் போற்றுகின்றன. அகம என்பது குடும்ப வாழ்க்கை காதல் [களவு] இல்லறம்[கற்பு] என்னும் இரண்டைச் சிறப்பிப்பதாக அமைந்துள்ளது.இது குறிஞ்சி முதலாகிய இந்து நிலங்களை அடிப்படையாகக் கொண்டது. தலைவியும் தலைவனும் கூடிப் பெற்ற இன்பம் பிறர்க்குச் சொல்ல முடியாததால அகத்துள் எண்ணி மகிழ்வது அகம்.

## பெண்பாற் புலவர்கள் :

சங்க காலத்தில் ஆடவரேயின்றி பெண்டிரும் கல்வித்திறன் பெற்று பாடல்கள் புனையும்அளவுக்குப் புலமை பெற்று விளங்கினர். ஔவையார், வெள்ளிவீதியார், நக்கண்ணையாா,ஒக்கூர் மாசாத்தியார்.ஆதிமந்தியார், பொண்டியர் போன்ற 37 பெண்பாற் புலவர்கள் சங்கஇலக்கியத்தின் 185 பாடல்களையும் புனைந்துள்ளனர்.

I.S.B.N-978-81-909-464-9-0 [V-4]

# 31. கண்ணதாசனின் உரைநடை நூல்களும் கவிதைகளின் செல்வாக்கும்



**பெ.வனிதா**
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி

## முன்னுரை

கண்ணதாசன் 1927-ஆம் ஆண்டு சூன் திங்கள் 24-ஆம் நாள் சிறுகூடற்பட்டி என்ற ஊரில் சாத்தப்ப செட்டியார், விசாலாட்சி ஆச்சி ஆகியோரின் மகனாகப் பிறந்தார் இவருக்குப் பெற்றோர் இட்ட பெயர் முத்தையா என்பதாகும். பின்னர் காரைக்குடியிலுள்ள பழ்னியப்பச் செட்டியார், தெய்வானை ஆச்சி தம்பதியரின் சுவீகார மகனாக மாறிய போது அவருக்கு இடப்பட்ட பெயர் நாராயணன் என்பதாகும். இவ்வகையில் கண்ணதாசன் தான் உணர்ந்தறிந்த வாழ்க்கை அனுபவங்கள் அனைத்தையும் மக்கள் சமுதாயத்திற்குத் தன் எழுத்துக்கள் மூலம் உணர்த்தினார். படைப்பாளிகளின் படைப்புகள் அவர்களை விடவும் படிப்பவர்களுக்கே அதிகம் பயன்படும்.

## கண்ணதாசனின் உரைநடை நூல்கள்

திராவிட முன்னேற்றக் கழகத்திலிருந்து விலகிய பின்னரே கண்ணதாசனினன்உரைநடை இலக்கியங்கள் குறிப்பிடத்தக்க வகையில் வளர்ச்சி பெற்றன. கண்ணதாசனின் இத்தகைய வளர்ச்சி நிலை பிற கவிஞர்களையும், அறிஞர்களையும் பெரும் வியப்பிலும், மகிழ்ச்சியிலும் ஆழ்த்தின. இளமை இரத்தத்தின் துடிப்பு கவிதை மனத்தின் சார்ந்த உணர்ச்சி அறிந்தோ அறியாமலோ ஏற்று கொண்ட தத்துவத்தில் பிடிப்பு சிறைவாச அவகாசம் கிடைக்கும் போதெல்லாம் தனது போக்கு சரியா? தவறா? என்ற ஆத்ம விசாரணை 1951 செப்டம்பர் 17-ம் தேதியில் தொடங்கி 1961 ஏப்ரல் 9-ம் தேதி தி.மு. கழகத்தை விட்டு விலகியது வரையிலும் கவிஞர் கண்ணதாசன் தான் ஈட்டிய பொருளையும், பொழுதையும் செலவழித்தப் பெற்றுக் கொண்ட அனுபவங்கள் உலகத்தை

ISBN - 978-93-80394-99-2



# இலக்கியங்களில் நீராதாரம் பன்முகப் பார்வை

பி. வனிதா
*உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி*
*புத்தனாம்பட்டி, திருச்சி - 621 007*

தமிழகத்தில் நீரியல் நாகரிகம் 2000 ஆண்டு பழமையுடையது. கல்லணை மட்டுமல்லாது பல குளங்களும் ஏரிகளும் பாசனத்துக்காப் பயன்படுத்தப்பட்டு நிலைத்த வேளாண்மைக்கு உத்தரவாதம் அளிக்கப்பட்டது. தமிழர் நாகரிகம் இதனை அடியொற்றியே அமைந்தது. நீர்ப்பாசன அமைப்புகளுக்கான தொழில்நுட்பம் குறித்து விவரங்கள், இலக்கியங்கள், கல்வெட்டுகளின் வழியாகவும் தற்போதும் உள்ள அக்காலத்திய நீர்நிலைகள் வழியாகவும் அறிய இயலும். உலகின் மிகச்சிறந்த தொன்மையான நீரியல் அறிவு தமிழர்களுக்குச் சொந்தமானது. இன்றைய நீரியல் மேலாண்மையை முன்னெடுத்துச் செல்ல இத்தகைய மரபின் மீதான ஞானம் நமக்கு மிகவும் அவசியமாகும்.

## நீராதாரங்களின் பயன்பாடு வேளாண்மை

நீர் ஆதாரங்களின் மூலமாக வேளாண்தொழிலே மிகவும் சிறப்புப் பெற்றிருந்தது. நிலத்தின் வலிமை நீர் கிடைக்கும் வாய்ப்பு போன்றவற்றின் அடிப்படையில் விளைநிலத்தினை வகைப்படுத்தலாம். சங்காலத்தில் மேலும் பல சொற்களாக விளை நிலங்கள் சுட்டப்படுகின்றன. கழன், வயல், படப்பை பழனம் என்றவாறு நீர்நிலங்கள் குறிக்கப்பட்டுள்ளன. பெண்ணை நதியின் பாசனத்தில் விளையும் நிலம் பெண்ணையம் படப்பை எனப்பட்டது. பண்டைத்தமிழர் மலைவளத்தால் நீர் வளம் பெற்றுப் பயிர் காத்தனர் என்பதையும் நீரைத் தேக்கி வைத்துத் தேவையான பொழுது பயன்படுத்தவும் வாரி, மதகு, மடை, மடு போன்றவற்றைக் கட்டித் தமிழர் பயன்படுத்தியுள்ளனர் என்பதையும் அறிய முடிகிறது. காவிரி பெண்ணை தாமிரபரணி முதலிய ஆறுகள் நீர்ப்பாசனத்துக்கு உதவின. சில வேலைகளில் வாளி கொண்டும் நீர் இறைத்துப் பயிர்த் தொழில் செய்தனர்.

**நீர்த் தெவ்வும் நீரைத்தொழுவர்**
**பாடு சிலம்பு மகை யேற்றத்**

# 66. நாட்டுப்புற மக்களின் தொழிற் பாடல்கள்

ISBN : 978-93-81006-76-4

பெ. வனிதா
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி*
*புத்தனாம்பட்டி - 621 007.*

## முன்னுரை

மனிதனை மாண்புடையவனாகக் காட்டும் பல்வேறு காரணங்களில் தொழிலும் ஒன்று செய்யும் தொழிலே தெய்வம் என்று தெய்வத்தோடு தொடர்பு படுத்திக் கூறும் அளவிற்கு இது முக்கியத்துவம் வாய்ந்தது. இந்தத் தொழில்கள் நகர்புறத்திற்கும், நாட்டுபுறத்திற்கும் வேறுபடும் தன்மையுடையது. நாட்டுப்புறமக்கள் தொழில்களில் ஈடுபடும் போது உடலில் ஏற்படும் களைப்பு தெரியாமல் இருக்க பாடல்கள் பாடப்படுகின்றன. அவற்றையே நாட்டுப்புறத் தொழிற் பாடல்கள் என்று அழைக்கிறோம்.

## நாட்டுப்புறவியல் -விளக்கம்

நாட்டுப்புற மக்களின் பழக்க வழக்கங்களையும் அம்மக்களின் பண்பாடுகளையும் நம்பிக்கைகளையும் இலக்கியங்களையும் ஆராயும் இயலே நாட்டுபுறவியல் என்பார். சு.சக்திவேல் ஒரு நாட்டு மக்களின் வாழ்வையும் அவர்களின் நம்பிக்கைகளையும் அறிவியல் முறையில் ஆராய்வதே நாட்டுப்புறவியல் ஆகும்.

## நாட்டுப்புறவியல்-சொல் விளக்கம்

நாட்டுப்புறவியல் என்ற சொல் Folk Lore என்னும் ஆங்கிலச் சொல்லிற்கு இணையாக தமிழில் உருவாக்கப்பட்டதே இச்சொல் உருவாவதற்கு முன் இத்துறை பற்றிய பல சொற்கள் வழக்கில் இருந்ததை அறிய முடிகிறது.

## நாட்டுப்புறப்பாடல் வகைகள்

தாலாட்டுப்பாடல்கள், குழந்தைப்பாடல்கள், காதல் பாடல்கள், தொழிற்பாடல்கள், கொண்டாட்டப் பாடல்கள், பக்திப்பாடல்கள், ஒப்பாரிப் பாடல்கள் என்று வகைப்படுத்தியுள்ளார். நாட்டுப்புற மக்களின் வாழ்வியல் செய்திகள் முழுவதையும் ஓரளவுக்குத் தெரிந்து கொள்ள இப்பாகுபாடு உதவி புரிவதாக அமைந்துள்ளது.

## தொழிற்பாடல்கள்

நாட்டுப்புற மக்கள் தொழிலில் ஈடுப்படும் போது வேலையின் சுமை தெரியாமலிருக்கவும் வேலையின் பளு அதிரிக்கவும் பாடல்களைப்

ISBN - 978-93-81006-86-3



# 97. சு. சமுத்திரம் அவர்களின் சிறுகதைகள் காட்டும் வாழ்வியல் நெறி

**செல்வி பெ.வனிதா**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*நேருநினைவுக் கல்லூரி*
*புத்தனாம்பட்டி.*

சமுத்திரம் படைப்புகள் சமூக விழிப்புணர்ச்சியைத் தூண்டி நல்வழிப்படுத்துவனாக அமைகின்றான. சமூகக் கண்ணோட்டத்துடன் எழுதும் அவர் கிராமம் நகரம்,அலுவலகம் ஆகிய மூன்று நிலைகளிலும் அனுபவம் பெற்றாமையால் இந்த மூன்றும் இவரது படைப்புகளில் நீக்க மற இடம் பெறுவதைக் காணலாம். நகரச் சூழலோடு தொடர்புடைய கதைகளாக உறவுக்கு அப்பால், கண்கெட்டபின்னே, சனிக்கிழமை, அண்ணன் வரட்டும் சொல்கிறேன். தாய்மை போன்ற கதைகள் அமைகின்றன. அலுவலர் சூழலோடு தொடர்புடைய கதைகள் காகித உறவு. அசைக்க முடியாது. பண்டராம் படுத்தும் பாடு போன்ற கதைகள் அமைகின்றன.

## நகரச் சூழலோடு தொடர்புடையக் கதைகள்

### உறவுக்கு அப்பால்

குடும்ப உறவு பொருளாதரத்தால் எவ்வாறு பாதிக்கப் படுகிறது.என்பதைக் காட்டுவதற்காக இக்கதை படைக்கப்பட்டுள்ளது. தியாகராஜன் குடும்பம் டெல்லியில் இருந்தபோது வித்யா பி.ஏ. படித்துக் கொண்டிருந்தாள்.கல்லூரியில் தோழிப் பெண்களோடு அரட்டை அடித்துக் கொண்டும் உல்லாசமாக இருந்தாள். விடுமுறையில் அத்தை வீட்டுக்கு சென்றபோது அத்தை மகன் ரவியை விரும்பினாள் அவனும் விரும்பியதால் இருவரும் விடுமுறை நாட்களை மகிழ்ச்சியாக கழித்தனர். இருவருக்கும் திருமணம் செயய்லாம் என்றும் முடிவு செய்தனர்.விடுமுறை முடிந்து வித்யா ரவியை பிரியமின்றி பிரிந்து சென்றாள்.சில மாதத்தில் வித்யாவின் தந்தை இறந்துவிட்டார். அவர் இறந்த மூன்றாமாண்டு நினைவுநாளை சென்னையில் நடந்த வித்யாவின் குடும்பத்தினர் சென்னைக்கு வந்தனர். அப்போது தான் அவருக்கு உறவினர்களின் போலி வேஷம் புரிந்தது.தந்தை இருந்த போது தன்னை மணப்பதாக கூறிய ரவி அவர் இறந்த பிறகு தனக்கு வேறு மாப்பிள்ளை பார்த்ததை அறிந்து வெகுண்டு எழுந்தாள் எங்க குடும்பம் நொடிச்சி போனது உண்மை, ஆனால் நீங்கள் மாப்பிள்ளை பார்க்கிற அளவுக்கு நொடிக்கவில்லை என்று நெற்றியில் அடிப்பது போல் கூறிவிட்டு கூறிவிட்டு தன் குடும்பத்துடன் கம்பீராமக நடந்துச் சென்றாள். இக்கதையின் மூலம் குடும்பஉறவுகள் பொருளாதாரத்தினால் பாதிக்கப்பட்டுள்ளது என்பதைக் காட்டுகிறது.

ISBN - 978-81-928100-4-1



## 3. அண்ணன்மார் சுவாமி கதை – ஒரு வரலாற்றுப் பார்வை

பெ.வனிதா
உதவிப் பேராசிரியர்,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

### முன்னுரை

நாட்டுப்புற மக்களின் கலைகளையும், இலக்கியங்களையும், நம்பிக்கைகளையும் பற்றி அறிவிக்கும் நாட்டுப்புற இயல் என்று கூறப்படும். ஆங்கிலத்தில் நாட்டுப்புற இயலை Folk Lore என்று அழைக்கின்றனர். இச்சொல்லை 1846 இல் தான் வில்லியம் தாமசு என்பவர் முதன் முதலில் பயன்படுத்தினர். அதற்கு முன்னர் **Popular Antiquities** அல்லது **Popular Literature** என்ற சொல் பயன்படுத்தப்பட்டது. இச்சொற்களில் நாட்டுப்புற இயலைப் பற்றிய முழுமையான பொருள் விளக்கம் இல்லை. எனவே தான் இச்சொற்கள் கைவிடப்பட்டு Folklore என்ற சொல் பயன்படுத்தப்பட்டு வருகின்றது(1). நாட்டுப்புறவியல் காலம் காட்டும் கண்ணாடி என்றால் நாட்டுப்புற இலக்கியம் சமூகம் காட்டும் கண்ணாடி என்று கூறப்படுகின்றது. "நாட்டுப்புற இலக்கியம்" கிராமப்புற மக்களின் அனுபவங்களை மட்டுமின்றி அவர் தம் மன உணர்வுகளையும் பிரதிபலித்து நிற்கின்றது. என இந்தியாவின் மூத்த நாட்டுப்புறவியல் போறிஞர் சங்கர் சென்குப்தா(2) கூறுகிறார். நாட்டுப்புற இலக்கிய வகைமைகளுள் ஒன்றாகக் கதைப்பாடல் சுட்டப்படுகின்றது.

### கதைப்பாடல் வரையறை

"பாலட் [Ballod] என்ற ஆங்கிலச் சொல்லுக்குச் சமமான தமிழ்ச் சொல்லாக கதைப்பாடல் என்பது வழங்கி வருகின்றது". கதையைப் பாடலாக கூறுவது அல்லது பாடலில் கதை பொதிந்து வருவது கதைப்பாடல் என்று அழைக்கப்படுகின்றது. "கதையொன்றை உள்ளடக்கமாகக் கொண்டு மக்கள் முன்னர் எடுத்துரைக்கப்பட்டுப் பரம்பரை பரம்பரையாக வாய்மொழியாக பாடப்பட்டு வருவது கதைப்பாடலாகும். இசைக் கருவிகளின் துணையுடன் ஒருவர் பாடுவதாகவோ அல்லது பலர் கூட்டமாச் சேர்ந்து பாடி எடுத்துரைப்பதாகவோ கதைப்பாடல் அமையும்" என்று பேராசிரியர் தே.லூர்து கூறுகிறார்.

கதைப்பாட்டு என்ற இலக்கிய வகையானது மக்களது நாவில் திகழ்கின்றது. இதை இயற்றியவர் யாராகயிருப்பினும் பாடுபவரது உரிமையாகவே மாறிவிடுகிறது. இதற்கு முன்னுரையும் பின்னுரையும் விளக்கமும் தேவையில்லை என கலைக்களஞ்சியம்(3) கூறுகிறது.

கதைப்பாடல்கள் வரலாறுகள் அல்ல. அவை வீரகாவியங்கள் மனிதப் பண்பின் உயர்ந்த அம்சங்களைப் போற்றுபவை. சமூகச் சீர்கேடுகளைக் கேலி செய்பவை. இவற்றைக் கற்பனையால் உருவான நாட்டார் பாடல் என்றே கொள்ள வேண்டும் என டாக்டர் நா.வானமாமலை(4) அவர்கள் கூறுகிறார்.

### கதைப்பாடலின் தோற்றமும் வளர்ச்சியும்

தமிழ்க் கதைப்பாடலின் தோற்ற வளர்ச்சியை ஆராய்வது கதைப்பாடலைப்புரிந்து கொள்வதற்குப் பெருந்துணையாக அமையும். கதைப்பாடலுக்குத் தமிழில் "அம்மானை" என்ற சொல் முதலில் சிலப்பதிகாரத்தில் கையாளப்பட்டுள்ளது. அம்மானையின் வளர்ச்சி கதைப் பாடலின் வளர்ச்சியாக அமைகின்றது.

### கதைச்சுருக்கம்

வாங்கலைத் தலைநகரமாகக் கொண்டு ஆண்டவர் கோளாத்தாக் கவுண்டர். இவர் ஒரு சிற்றரசனைப் போல் வாழ்ந்தவர். இவரது மனைவியார் பவளாத்தாள். இவர் மகன் குன்றுடையான் ஆவார்.

ISBN -978-81-923995-5-3

# 340. பெண் விடுதலை

பெ. வனிதா
உதவிப் பேராசிரியை,
தமிழ்த்துறை, நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

## முன்னுரை

பெண் விடுதலை என்பது காலங்காலமாகப் பேசப்பட்டு வருகின்றது என்றாலும் அது கடந்த நூற்றாண்டின் இறுதிக் காலத்தில் எழுச்சி பெற்றது. உலகமெங்கும் பெண்ணுக்கு சுதந்திரம் தரப்படாமலும் பெறப்படாமலும் பேசப்பட்டு வந்தது. விடுதலை என்பது ஒருவர் தந்து ஒருவர் பெறுவதல்ல என இருதரப்பினரும் உணரும் காலம் வந்துவிட்டது. கல்வியும் பணித்தேவைகளும் பெண்ணுக்கு ஜன்னல் திறந்தன. தனி வாழ்வில், பொதுவாழ்வில், அரசியலில், நிர்வாகத்தில் பெண் சமமானவள் என்று உணரவும் உணர்த்தவும் தலைப்படலாயிற்று.

## பெண் விடுதலை

இயற்கையில் ஆணும் பெண்ணும் சமமாகப் பிறக்கப்படுகின்றனர். சமுதாயப் பரிணாம வளர்ச்சியில் சொத்துடைமை வளர்ந்தபிறகு பெண்ணுக்குரிய கடமைகளும் உரிமைகளும் மறுக்கப்பட்டன. இதனால் இச்சமுதாயத்தில் பெண் அடிமையாக்கப்பட்டாள். இந்த அடிமை நிலையிலிருந்து பெண் விடுதலை பெறவேண்டும். அதாவது பெண் என்பவள் அவள் வாழ்நிலை உணர்வோடு வாழவேண்டும் என்பதே பெண் விடுதலையாகும்.

## பெண்ணின் உரிமைகள்

★ பெண்களை ருதுவாகுமுன்பு விவாகம் செய்து கொடுக்கக்கூடாது.
★ சொத்தில் சம உரிமை தரவேண்டும்.
★ திருமணமின்றி வாழும் உரிமை வேண்டும்.
★ பிற ஆடவருடன் பழகும் சுதந்திரம் வேண்டும்.

ISBN -978-93-81006-77-1



# 37. நாட்டுப்புற நம்பிக்கைகள்

**பெ.வனிதா**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி*
*புத்தனாம்பட்டி.*

## முன்னுரை

அரிது அரிது மானிரடராய் பிறத்தல் அரிது என்பது ஔவையாரின் முதுமொழியாகும். இம்மானிடப்பிறப்பில் நாட்டுப்புற மக்களின் வாழ்க்கை முறைகளை அதாவது அம்மக்களின் பிறப்பு என்னும் நிகழ்வுக்கும் இறப்புக்கும் இடைப்பட்டதும் பிறப்புக்கு முன்பும் இறப்புக்குப் பின்பும் நிகழ்கின்ற அனைத்து வாழ்வியல் நம்பிக்கைத் தொடர்பான நிகழ்ச்சியைக் கூறுவது நாட்டுப்புறவியல் எனலாம். நாட்டுப்புற மக்களின் வாழ்வியலில் கொண்டுள்ள நம்பிக்கையை ஆராய்வதே இக்கட்டுரை ஆகும்.

## நம்பிக்கை வகைகள்

நாட்டுப்புறவியல் என வரையறுக்கப்பட்ட காலம் தோன்றிய காலம் இதுதான் என்று அறுதியிட்டுக் கூற முடியாது. மனிதன் என்று தோன்றினானோ அன்றே நாட்டுப்புறவியற் கூறுகளும் தோன்றி இருக்கலாம் என்று எண்ணுவதற்கு இடமுண்டு. இந்நாட்டுப்புறவியலின் ஒரு கூறாகப் பல்வேறு நம்பிக்கைகள் வழக்கில் உள்ளதை அத்தகைய மக்களின் வாழ்க்கை முறையின் வழி அறிய முடிகிறது. நம்பிக்கை என்பது மரபாகத் தொன்று தொட்டு வரும் கருத்துக்கும் நாட்டுப்புற மக்களிடையே காரண காரிய அடிப்படையில் உருவாகி வளர்ந்ததாகும் எனக் கூறும் டபிள்யூ போஸ்வெல் என்பாரின் கருத்தினை மேற்கோள் காட்டுவார் சு.சக்திவேல்[1].

மனிதன் தன் வாழ்வியலில் நம்பிக்கையை பெரிதும் காண்கிறான். இந்நம்பிக்கைகள் மக்களால் உருவாக்கப்பட்டு அவை அம்மக்கட் சமுதாயத்தால் பாதுகாக்கப்படுகின்றன. மனிதனின் தன்னல உணர்வும் சமுதாய உணர்வுகளும் நம்பிக்கைகளை வளர்த்து வருகின்றன. என சு.சக்திவேல் குறிப்பிடுகிறார்[2].

மனித வாழ்வில் காணப்படும் நம்பிக்கைகளில் குறிப்பிடத்தகுந்த நம்பிக்கைகள் என கீழ்க்கண்டவற்றைக் கூறலாம். அவையாவன

1. கடவுள் தொடர்பானவை.
2. குழந்தை தொடர்பானவை.
3. பெண்கள் தொடர்வானவை.
4. திருமணம் தொடர்பானவை.
5. நோய்கள் தொடர்பானவை.
6. கனவுகள் தொடர்பானவை.
7. உடை தொடர்பானவை.

ISBN : 978-93-81006-06-1



# 98. சங்க இலக்கியங்களில் வாழ்வியல் நெறிகள்

**முனைவர் வா. ரா. விஜயலெட்சுமி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*நேரு நினைவுக்கல்லூரி*
*புத்தனாம்பட்டி.*

தமிழ்க் குடிமக்கள் அனைவரும் முற்காலத்தில் நாடோடிகளாகவும்,பாமரர்களாகவும், இனக்குழு மனிதர்களாகவும்,வாழ்ந்து வந்திருக்கின்றனர். சங்கத் தமிழர் வாழ்வு, தமிழக நிலத்தில் பரந்துபட்டு காணப்படுகின்றன. படைப்பாளர்களின் முக்கிய நோக்கமாக இருப்பது தமது படைப்பு வழியாக மனித வாழ்வியலை வடித்தெடுப்பதே. வாழ்வியல் என்பது மக்களின் பழக்கவழக்கம், நம்பிக்கை,ஆண்பெண் உறவு,சமுதாய அமைப்பு, வாழ்க்கைப் போராட்டம்,கல்வி, அரசியல், பொருளியல் என எண்ணற்ற களங்களை உள்ளடக்கியது. இயந்திரத்தனமான வாழ்கையில் தொலைந்துபோன இன்றைய சமுதாயத்திற்கு சங்கக் கவிஞர்களின் வாழ்வியல் நெறிகளை,வாசிக்கின்ற ஒவ்வொரு வாசகனுக்கும் பல புதிய பரிமாணங்களை விட்டுச் செல்லக் கூடியதாகவே இருக்கின்றது. இந் நிகழ்வுகள் எதிர்கால சந்ததியினருக்கு வழிகாட்டியாக அமையும் வகையில் அறிவுறுத்துகின்ற பணியினை இலக்கியங்கள் செய்து வருகின்றன.

## விருந்தினரைப் பேணல்

விருந்தோம்புதலில் தமிழர்கள் தலைசிறந்தவர்கள். தமிழ் இலக்கியங்கள் எல்லாவற்றிலும் தமிழர்களின் இச்சிறந்த பண்பைக் காணலாம். இல்லறத்திலே வாழ்வோர்க்குரிய கடமைகளில் 'விருந்துபுரத்தல்' என்பதைச் சிறந்த கடமையாக அறநூல்கள் குறிக்கின்றன. இந்த அறநூல்களின் கருத்தையே பண்டையத் தமிழர்கள் பின்பற்றி வந்தனர்.

நற்றிணைப் பாடல்களில் தலைவன் தலைவியைப் பிரிந்து பொருள் தேடச் செல்கிறான். இதை அறிந்த தலைவி வருந்துகிறாள். தலைவன் பொருள்வயிற் பிரிந்து சென்றது விருந்தினரைப் பேணி உன்னுடைய அன்பைப் பெறுவதற்கும், மீண்டு வந்து சிறப்பான இல்லறம் நடத்துவதற்கும் ஆகும் எனத்தோழி அறிவுறுத்துகிறாள் இதனை,

"
. . . . . . .
***அல்லி வந்த நல்லிசை விருந்திற்குக்***
***கிளரிழை அரிவை நெய்துழந்து அட்ட***
***விளர்ஊன் அன்புகை எறிந்த நெற்றிச்***
***சிறுநுண் பல்வியர் பொறித்த***
***குறுநடைக் கூட்டம் வேண்டுவோரே"***

என்ற பாடலின் வழி அறியலாம்.

ISBN: 978-93-81006-91-7


# 67. சங்க இலக்கியங்கள் உணர்த்தும் நட்பு

**முனைவர் வா. விஜயலெட்சுமி**
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி*
*புத்தனாம்பட்டி, திருச்சி.*

## முன்னுரை

மனித பண்பாட்டுடன் கலந்தது நட்பு. இந்த நட்பு மனித நேயம் தோன்றுவதற்கு காரணமாக அமைகிறது. தனி மனிதனை இச் சமுதாயத்துடன் இணைப்பது நட்பாகும். மனிதர்களுக்குள் இருக்கும் துன்பத்தைக் களைந்து இன்பத்தைத் தருவது நட்பு. நட்பு கொள்ளாத மனிதர் இவ்வுலகில் எவரும் இலர் எனலாம். அந்தளவிற்கு மனிதனின் வாழ்வியலில் ஒன்றான நட்பு சமுதாயத்தின் உயர்வுக்கும், ஒற்றுமைக்கும் பாலமாக அமைந்துள்ளது. மனித பண்பாட்டு வளர்ச்சியில் 'நட்பு' இன்றியமையாதக் கூறாக அமைந்துள்ளது.

## நட்பின் சிறப்பு

மனிதன் என்று இவ்வுலகில் தோன்றுகின்றானோ, அன்றே அவன் நட்பு கொள்ளத் தொடங்கிற்றான். பிறக்கும்போது தாயிடம், பிறந்து வளர்ந்து வரும்போது உறவுகளுடன், வாலிப பருவத்தில் தனது வயதொத்த மனிதர்களிடமும், பின்பு இதயம் கலந்த மனிதர்களுடன் நட்பு அமைகிறது. மனிதனின் துயரம் கலந்த மனதுக்கு ஆறுதலும், அமைதியும், அன்பையும் தருவது நட்பாகும். மனிதநேயத்தை மண்ணில் நிலைபெறச் செய்வது நட்பு.

*"நட்பிடை வஞ்சித்தவன் இம்மையில் குட்ட நோயிலும்*
*மறுமையில்நரகத்திலும் அழுந்துவான்"*

என்று திருத்தக்கத் தேவர் கூறுகிறார்.

## நட்பின் இலக்கணம்

திருவள்ளுவர் நட்பு, நட்பாராய்தல், தீ நட்பு, கூடா நட்பு என நான்கு அதிகாரங்களில் நட்பின் இலக்கணத்தை வரையறுத்துள்ளார். நல்ல நட்பைப் பெறுவது அரியது. பெறுவதற்குரியவற்றுள் நட்பினை விட சிறந்தது வேறு என்ன இருக்கிறது. அரிய சிறந்த நல்ல நட்பைப் பெற்று விட்டால் அதைவிட உறுதியான காப்பு வேறொன்றுமில்லை என்பதை,

*"செயற்கரிய யாவுள நட்பினது போல்*
*வினைக்கரிய யாவுள காப்பு"*

என்கிறார் திருவள்ளுவர். நட்பானது உள்ளம் இணைந்த உண்மையான நட்பாக இருத்தல் வேண்டும். முகத்தினால் அன்பு கொண்ட நட்பாக இருத்தல் சிறந்த நட்பாகாது என்பதை,

*"முகநக நட்பது நட்பன்று நெஞ்சத்து*

ISBN: 978-81-928616-8-5

# 63. சங்க இலக்கியங்கள் உணர்த்தும் பண்பாட்டியல்

முனைவர் வா.ரா.விஜயலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி, திருச்சி.

## முன்னுரை

ஈகை என்பது தன்னிடம் இரந்து நிற்பவர்க்கு இல்லை என்று கூறாமல் வழங்குதல் ஆகும். மனிதனின் நல்லறங்கள் பலவற்றுள் உயர்ந்தது ஈகையாகும். வறுமையில் துன்புற்ற மக்களுக்கு வேண்டிய பொருளை வழங்கி அவர்களின் துன்பத்தைப் போக்குவது சிறந்த அறம் எனலாம். ஈகைக் குணம் கொண்டவர்கள் இவ்வுலகில் பெரும் புகழையும் பேறினையும் அடைவார்கள். இவ்வுலகம் அக்குணம் கொண்டவனைப் போற்றி துதிக்கும்.

சங்க கால மன்னர்கள் தங்களை நாடி வந்து பொருள் கேட்டுப் பாடிய புலவர்கள் வேண்டியதையும் கிடைத்தற்கரிய பொருள்களையும் அவர்கள் மனம் மகிழும் அளவிற்குக் கொடுத்த ஈகைப்பண்பினைச் சங்க இலக்கியங்கள் பறை சாற்றுகின்றன.

## திருக்குறளில் ஈகை

திருவள்ளுவர் திருக்குறளில் ஈகை' என்ற தலைப்பில் ஓர் அதிகாரத்தைப் படைத்துள்ளார். இல்லாத ஏழைகளுக்கு ஒன்று கொடுத்துதவ வேண்டும் என்பதை,

"வறியார்க் கொன்று ஈவதே ஈகை"

என்று கூறுகிறார்.

ISBN: 978-81-909-464-9-0 (V-4)

# 28. கண்ணதாசனும் அவரது கவிதை வரலாறும் - ஓர் ஆய்வு



வா.இரா.விசயலெட்சுமி
உதவிப்பேராசிரியை
நேருநினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி

## முன்னுரை

தமிழ் கவிதை வரலாற்றில் தன் கவித்திறத்தால் நிலைத்த இடம் பெற்று திகழ்பவள் கண்ணதாசன் ஆவார். இவர் தம் கவிதை, கட்டுரை, நாவல், நாடகம், திரையிசைப் பாடல் போன்ற பலதிறத்தாலும், பேச்சு, நடிப்பு போன்ற பிற ஆற்றல்களாலும், மக்கள் மனதில் எக்காலத்திலும் நிலைத்து நிற்கும் பேறு பெற்றவர். தம் பதினேழாம் வயதில் திருமகள் என்ற பத்திரிக்கையில் ஆசிரியராகப் பொறுப்பேற்ற போது கண்ணதாசன் என்று தம் பெயரை மாற்றிக் கொண்டவர். கல்விக் கூடத்திற்குச் சென்று முறையாகக் கல்வி பயிலாத போதும் இவரது கல்வி அறிவு பரந்து பட்டதாகவே அமைந்திருந்தது. கண்ணதாசனும் அவரது கவிதை வரலாறும் என்ற தலைப்பில் இக்கட்டுரை அமைந்துள்ளது.

## கவிஞர்களின் இயல்பு

பொதுவாகக் கவிஞர்களின் எண்ணோட்டங்கள் உலகியலை மையமாகக் கொண்டே அமைந்திருக்கும். தங்களுடைய சுய நலனுக்காகவோ, ஆத்ம திருப்திக்காகவோ மட்டும் எழுதுபவர். உண்மைக் கவிஞர்கள் அல்லர். எனவே உண்மைக் கவிஞன் என்பவன் சமுதாய நலனைக் கருத்திற் கொண்டு தன் எண்ணக் குவியல்களை வெளியிடும் உரிமை பெற்றவனாக இருக்க வேண்டும். காலமாற்றத்திற்கேற்ப மக்களின் வாழ்வியல் நெறிமுறைகளில் மாற்றம் ஏற்படுவதால் கவிதைகளின் பாடுபொருளும் பாடும் முறையும் மாறுபடுகின்றன. இருபதாம் நூற்றாண்டுக் கவிதைகள் காலமாற்றத்திற்கேற்பப் பாடுபொருள் மாற்றங்களைத் தாங்கி வெளி வந்தன. காலத்தின் தேவைக்கேற்பக் கவிதையை மாற்றியதில் முதன்மையிடம் பாரதியாருக்கே உரியது.

ISBN: 978-81-910214-7-9

# வள்ளாலாரின் வாழ்வியல் கோட்பாடுகள்

வீ.ஆர். விஜயலெட்சுமி
உதவிப்பேராசிரியர்
நேரு மெமோரியல் கல்லூரி
புத்தானம்பட்டி

## முன்னுரை

இவ்வுலகம் நிலைத்து வாழ்வதற்குக் காரணம் அருட்பெருஞ் சான்றோர்கள். ஆன்மிகக் குறிக்கோள் கொண்ட அத்தகைய சான்றோர்கள் வரிசையில் தோன்றியவர் வடலூர் இராமலிங்க அடிகளாவார். இவர் சமரச சன்மார்க்க ஞானியாகவும், சமயம் கடந்த சமுதாய நலச் சித்தராகவும் விளங்கினார். இவர்கள் தம் காலத்தில் மக்கள் சமயச் செந்நெறியின் நோக்கத்தைப் புரிந்து கொள்ளாத நிலையில் நிலைதடுமாறி வாழ்ந்ததை அறிந்து அதற்காக நைந்து நின்றார். தெய்வங்களின் பெயரால் கொலையும், மூடநம்பிக்கைகளும் தலைவிரித்தாடுவதைக் கண்டு கலங்கினார். மேல்நாட்டு அறிவியல் பண்பாட்டுத் தாக்கமும் மக்களது வாழ்வைத் திசைமாற்றியது கண்டு வருந்தியதோடு மட்டுமல்லாமல் தம்மால் இயன்ற மட்டும் உயர்ப் பொறுப்புடன் அந்த மாயைச் சூழலிலிருந்த மக்களை விடுவித்து வாழ்வாங்கு வாழ வைக்க உறுதி பூண்டார்.

"மண்ணின் நீள் நடையில் வந்தவெம் துயரை
மதித்துளம் வருந்திய பிறர்தம்
கண்ணினீர் விடக்கண்டு ஐயவோ நானும்
கண்ணினீர் விட்டுளங் கவன்றேன்." (பிள்ளைபெரு விண்ணப்பம், 57)

என இவ்வுலக நிலையை நினைத்து நினைத்து வருந்திய நிலையைக் காணமுடிகிறது. வள்ளலாரின் கொள்கை இறைவனை நோக்கியதாக மட்டுமல்லாமல் உலகம், சமுதாயம், சமூகம் நோக்கியதாக இருந்தமை

# தேவதேவன் கவிதைகளில் காற்று மாசுபடுதல்

ISBN - 978-93-80394-99-2

முனைவர் வா.இரா.விஜயலெட்சுமி
*உதவிப் பேராசிரியர், தமிழ்த்துறை*
*நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி.*

**முன்னுரை**

பூமியில் உள்ள அனைத்து உயிரினங்களுக்கும் காற்று தேவைப்படுகிறது. உயிரினங்கள் தமது உணவிலிருந்து சக்தியைப் பெறுவதற்காக சுவாசித்தலின் மூலமாகக் காற்றை எடுத்துக் கொள்கின்றன. ஆகவே, காற்றின் தரமானது என்ன விலை கொடுத்தேனும் பாதுகாக்கப்பட வேண்டிய மாபெரும் அற்புத வளமாகும். ஆனால் இன்றைய சூழலில் பலவிதமான மாசுக்களினால் காற்றானது மிகவும் மோசமாகப் பாதிக்கப்பட்டிருக்கிறது. மனித வாழ்வில் பெரும்பங்கு வகித்துள்ள காற்றினை மனிதர்களே மாசுபடுத்தி வருகின்றோம். காற்று மாசுபடுவதால் மாசுபடுத்திய உயிரினங்களே அதிக விளைவுகளையும் சந்திக்கின்றன. உடலுக்கு ஊறும் உபாதையும் தரக்கூடிய வகையில் காற்றின் சதவிகித இயைபு இயற்பியல், வேதியியல் முறைகள் மூலம் மாற்றம் அடைவதையே காற்று மாசுறுதல் என அழைக்கின்றோம் என்று காற்று மாசுறுதல் பற்றித் தெளிவுபடக் கூறுகின்றனர். மக்கள் தொகைப் பெருக்கம், தொழிற்சாலைகள் அதிகரிப்பு இவற்றினால் காற்றில் தேவையற்ற வாயுக்கள், திரவங்கள் அல்லது திடப்பொருட்கள் கலந்து விடுகின்றன. இதனால் காற்று மாசடைந்து விடுகின்றது. மனிதனையும் அவனது சுற்றுச்சூழலையும் பாதிக்கத்தக்க அளவு காற்று மாசுபடுவதே காற்று மாசு என WHO வரையறுக்கிறது என்று காற்று மாசுறும் நிலையினை எடுத்துரைக்கின்றனர்.

**காற்று மாசடைவதற்கு மூலகாரணம் :**

உலகின் எல்லாப் பகுதிகளிலும் விசுவரூபம் எடுத்து நிற்கும் பிரச்சனை காற்று மாசுபடுதலாகும். ஊலகின் 98 சதவீதம் காற்று மாசடைகின்றது. காற்று மாசடைய மூலகாரணங்கள் பல. அவற்றின் முக்கியக் காரணங்களாகக் கூடியவை குறித்துக் கீழ்வருமாறு கூறப்படுகின்றன. (1) நிலக்கரி அல்லது எண்ணெய் எரிக்கப்படுதல் (2) பெட்ரோல் சுத்திகரிக்கப்படும் தொழிற் கூடங்கள் (3) வெடிமருந்து தயாரிக்கும் தொழிற்சாலைகள் (4) உரத் தொழிற்சாலை (5) போக்குவரத்து வாகனங்கள் என இவற்றைக் காற்று மாசுபடும் காரணங்களாகக் கொள்ளலாம்.

# குறிஞ்சித் திணையில் தலைவியின் மாண்பு

ISBN 978-81-908592-2-6

✍ மு.விஜயலெட்சுமி
உதவிப் பேராசிரியர்
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி.

## முன்னுரை

தமிழ் மொழியில் எண்ணற்ற இலக்கியங்கள் தோன்றியிருப்பினும் இன்றும் மக்கள் மனதில் நீங்காத இடம் பெற்றுள்ளவை சங்க இலக்கியங்களே ஆகும். ஈராயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தமிழர்களின் வாழ்க்கையை எடுத்துக்கூறுவது சங்க இலக்கியங்கள் ஆகும். சங்க கால மக்கள் காதலையும், வீரத்தையும் தம் இரு கண்கள் எனப் போற்றி வளர்த்தனர் என்பதனைச் சங்க இலக்கியங்கள் நமக்கு உணர்த்துகின்றன. அன்பின் ஐந்திணைகளில் ஒன்றான குறிஞ்சித் திணையில் தலைவியின் காதல் சிறப்பை ஆராய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## குறிஞ்சி

குறிஞ்சி என்பது ஒருவகை மலரின் பெயர். இம்மலரே மலைப்பகுதியில் குறிக்கத்தக்க தாவரம் ஆதலின் மலையும் மலை சார்ந்த பகுதியும் குறிஞ்சி என வழங்கப்பெற்றது. மலைக்கடவுளாகிய முருகனைக் குறித்த பாடல்களும் குறிஞ்சி எனப்பெற்றன. குறிப்பிட்ட ஒரு பண்ணும் குறிஞ்சி எனப்படும்.

## பாத்திரங்கள்

குறிஞ்சித்திணையில் நான்கு பாத்திரங்கள் மட்டுமே பேசப்படுகின்றன. அவை, தலைவன், தலைவி, தோழி, பாங்கன் ஆகியன ஆகும். இத்திணையில் தலைவியை முனைப்பாகக் காவல் செய்வதோடு குடும்பப் பெருமையைக் காக்க முயல தாய் செவிலியின் கூற்றாக ஒரு பாடலும் இல்லை.

சங்கப்பாடல்கள் ஒவ்வொன்றிலும் காணப்படும் அடிக்குறிப்பின்படி தலைவன் 83 கூற்றுக்களையும், தலைவி-112 கூற்றுக்களையும், தோழி-290 கூற்றுக்களையும், பாங்கன்-2 கூற்றுக்களையும், பரத்தை ஒரு கூற்றையும் பெறுகின்றனர்.

ISBN 978-93-80622-06-4

# வள்ளுவரின் குறட்பாக்களில் மருத்துவம்

முனைவர் வ.ரா. விஜயலட்சுமி
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி

அறிவியலின்றி ஓர் அணுவும் அசையாது என்று கூறுமளவிற்கு அனைத்துத் துறைகளிலும் அறிவியல் ஆதிக்கம் செலுத்தி வருகிறது. மனித நாகரிகத்தின் வளர்ச்சிக்கு ஈடு கொடுக்கும் வகையில் அன்றாட வாழ்வில் அறிவியலின் பயன்பாடு நீக்கமற நிறைந்துள்ளது.மக்களின் நல்வாழ்வுக்கு அடிப்படையாய் அமைந்த மருத்துவ அறிவியல் இன்று வளர்ந்தோங்கி நிற்கிறது. இரண்டாயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் தமிழ்ச் சமுதாயத்தில் நிலவி வந்த மருத்துவ அறிவியல் சிந்தனைகளைத் திருக்குறள் இலக்கியம் பதிவு செய்துள்ளதைப் பார்க்க முடிகிறது.நவீன மருத்தவச் செயல் நெறிகளோடு அச்சிந்தனைகள் இயைந்து நிற்கின்றன என்பதைக் காண்பதே இக்கட்டுரையில் நோக்கம் ஆகும்

**ஆயட் காலம்:**

மக்கள் நலமுடன் நீண்ட ஆயுள் காலத்தோடு வாழ வேண்டும் என்பது குறளாசிரியரின் விருப்பம்.நிலமிசை நீடு வாழவார் என்றும், நெறிநன்றார் நீடு வாழ்வார் என்றும் அவர் குறிப்பிடுவதன் மூலம் இதனை உணர முடிகிறது. இதனை நோக்கியே நகர்ந்து செல்கிறது. உயிரணுவின் வரைபடம் கண்டுபிடிக்கப்பட்டு அதன் மூலம் உயிரணுவின் எந்தவிதமான கோளாறுகளும், குறைபாடுகளும் கண்டுபிடிக்கலாம். மக்களின் ஆயுள் அதிகரிக்க வழி காணப்பட்டுள்ளது.

> அற்றால் அளவறிந்து உண்க அ஼துடம்பு
> பெற்றான் நெடிது உய்க்குமாறு.

உடல் கோளாறுகளைக் களைய இன்றைய உலகு வழிகண்டு வருகிறது. வள்ளுவரோ உடல் கோளாறே தோன்றாமலிருக்க வழிகண்டுள்ளார். முன் உண்ட உணவு செறித்ததை நன்கு அறிந்து அளவோடு உணவு உண்டு வந்தால் மனிதன் எந்த விதமான நோயுமின்றி நீண்டநாள் வாழ முடியும் என்பதை மேற்காட்டிய குறள் உணர்த்தி நிற்கிறது.

ISBN: 978-93-81006-05-4



# 1. கவிமணியும் அவரின் தெய்வீக படைப்பும்

**வா.ரா. விஜயலெட்சுமி**
*உதவிப் பேராசிரியர்*
*தமிழ்த்துறை*
*நேரு நினைவுக்கல்லூரி*
*புத்தனாம்பட்டி.*

எழுத்துக்களுக்கு நெற்றிக் கண் கொடுத்த எட்டயபுரத்து கவிஞன் பாரதிக்குப் பிறகு கவிதை உலகில் அடியெடுத்து வைத்த கவிஞர்களுள் கவிமணியும் ஒருவர். தொண்டு அல்லது சேவை என்று சொல்கிற பொழுது சிறை செல்வதையும் தடியடிகள் தாங்குவதையும் கண்ணீர் புகை, துப்பாக்கிக் கொண்டு இவை ஏற்பதையும் தான் பொதுவாகக் கருதுகின்றார்கள். எவ்வகை தொண்டுக்கும் எக்காலத்துக்கும் இவையே கைம்மாறு என்று கூறுதல் இயலாது. உலகிலேயே அமைதியான முறையில் செய்யத்தகும் நற்பணிகளும் பல உள்ளன.மனிதனை தலையெடுக்க விடாமல் ஆழ்த்தி வைக்கின்ற அடிமையென்னும் புறப்பகையை அழித்தொழிக்கும் பணி எவ்வளவு சிறந்ததோ அது போல மனிதன் ஒளி பெற அப்பகையை அழித்தொழிக்கும் தொண்டும் ஒப்பற்ற தொண்டேயாகும். இம் முயற்சியில் ஈடுபட்டவர், சிறந்த தொண்டர் கவிமணி என்பதை அவர் எழுத்தாற்றல் மூலம் இச் சமுதாயத்திற்கு எடுத்து வைப்பதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.

## கவிமணியின் மாண்பு

தனது வாழ்வின் தொண்டாக ஒப்பற்ற பணியாக கவிமணி அவர்கள் மேற்கொண்ட முறை மிக மிக மென்மையானது வலிய பேருண்மைகளை யெல்லாம் மெல்லிய கவிமலர்களாகச் செய்தார். அக் கவிஞனின் மெல்லிய கவிதைகள் இளம் சிறார்களின் இதயத் தாமரைகளை மெதுவாக தென்றலாய் தவழ்ந்து வருடியது. ஒவ்வொரு மானிடனின் உள்ளங்களிலும் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்தியது.

ஆயிரம் இதழ்களாகிய கண்களையமர்த்திக் கொண்டு மஞ்சள் பொடி பூசி, ஆகாசவூர்தியிற் செல்லும் ஆதித்தனை நோக்கி நிற்கும் சூரியகாந்திப் பூவை, அனபான மேனியை நோக்கி நிற்கும் ஆபரணங்களோடு ஒப்பிட்டுக் கூறுகின்றார் கவிமணி. “மஞ்சள் குளித்து மிகமினுக்கி இந்த மாயப்பொடி பூசி நிற்கும் நிலை கஞ்ச மகள் வந்து காணிற் சிலிர்க்குமோ கண்ணிருக்குமோ யாரறிவார்?” என்ற கேள்வி களத்தில் குதித்து ஒரு பெரும் போராட்டத்தை உருவாக்குகிறார்.

இவ்வுலகில் முதியோர்களை விடவும் இளையோர்களே மிகுதியானவர். அவர்களே வருங்கால உலகச்சிற்பிகள். எதிர்காலத்தின்

ISBN: 9788193044 0-0-1

# பண்பாட்டு ஊடாட்டத்தில் சமூக அமைதி

முனைவர் **கி. கீதா**
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை
நேரு நினைவுக் கல்லூரி
புத்தனாம்பட்டி

தமிழினம் தொன்மையானது. தொன்மைக் காலம் முதலே தமிழர் பல நாடுகளோடு வாணிகத் தொடர்பு கொண்டுள்ளனர். பிறநாடுகளில் தமிழர் குடியேறினர். இக்குடியேற்றங்களாலும் வணிகத் தொடர்பினாலும் பண்பாடுகள் கலந்தன. தமிழர் பிறர்க்குக் கொடுத்தது போலவே பிறரிடமிருந்து பெற்றுக் கொண்டனவும் பலவாகும். தமிழ்ப் பண்பாடு பரவிய நாடுகளில் தென்கிழக்காசிய நாடுகள் குறிப்பிடத்தக்கவை. இலங்கை, பர்மா, சயாம், சாவகம் முதலான நாடுகளில் நெடுங்காலத்திற்கு முன்பே தமிழரின் குடியேற்றம் ஏற்பட்டது. வணிக உறவே பெரும்பாலும் இதற்குக் காரணமாகும். வைணவமும் மகாயான ஹீனயான பௌத்த நெறிகளும் இங்கிருந்தே இந்தப் பகுதிகளுக்குச் சென்றனர். இவற்றோடு தமிழகச் சிற்ப, ஓவிய, கட்டிடக் கலைகளும் இலக்கியங்களும் அங்கே இடம் பெறலாயின. இப்பண்பாட்டுக் கலப்பினை அளவிட்டறிதலும், வேறுபடுத்திக் காண்பதும் இக்கட்டுரையின் நோக்கமாகும்.

**ஈழம்**

தமிழகத்திற்கு மிக அண்மையிலுள்ள தீவு இலங்கையாகும். இது பன்னெடுங்காலத்திற்கு முன்னர் கடல் கொண்ட குமரி நாட்டின் பகுதியாக இருந்ததென்பர். இதன் வடபகுதியான யாழ்ப்பாணம் தமிழ்நாடாகவே உள்ளது. பெயரே யாழையும் பாணரையும் நினைவூட்டுகிறது. 2000 ஆண்டுகளாக அங்கே தமிழரும் சிங்களரும் இணைந்து வாழ்கின்றனர். கி.மு 6 ஆம் நூற்றாண்டில் விசயன் என்னும் சிங்களன் பாண்டியன் மகளை மணந்தான் என்பர். ஏலரா என்னும் கோணாட்டு மறவன் இலங்கையை வென்று கி.மு 205 முதல் 161 வரை ஆண்டதாகக் கூறுவர்.

ISBN : 978 81923995-4-6





முனைவர். கி. கீதா
உதவிப் பேராசிரியர்
தமிழ்த்துறை,
நேரு நினைவுக் கல்லூரி,
புத்தனாம்பட்டி.

## மொழி வளர்ச்சியில் சிற்றிதழ்களின் பங்கு

மக்கள் தொடர்பு சாதனங்கள் தொடக்கத்தில் தகவல்களைத் தெரிவிக்கவும், அறிவுறுத்தவும் தோன்றின. இவற்றிற்கு மேலாக மூன்றாவதாகப் பொழுது போக்குக் கூறுகளுடன் மக்களை மகிழ்விக்க வேண்டியப் பணிகளை விரிவடையச் செய்தனர். ஆனால் இம்மூன்றாவது கூறு மனித சமுதாயத்தின் பண்பாட்டைச் சிதைத்துச் சீரழிக்கும் தன்மையைப் பெற்று விளங்குகிறது. இத்ழ்கள் மக்கள் நலனையும், பண்பாட்டு வளர்ச்சியையும், அறிவு வளர்ச்சியையும் கருத்தில் கொண்டவையாக விளங்குதல் வேண்டும். ஆனால் இன்றைய இருபத்தோராம் நூற்றாண்டில் நிலைமை முற்றும் முரண்பட்டு விளங்குதல் கண்கூடு. பணத்தை முதலீடு செய்துள்ள இதழ்கள் முதலாளிகள் பணம் பண்ணுவதற்கும் இதழியல் ஒரு நல்ல களம் என்று கருத வாசகப் பெருமக்களின் மனத்தைப் பண்படுத்தி உயர்த்திப் பண்பாட்டையும் அறிவையும் வளர்த்துச் சமுதாய ஒழுக்கத்தைக் கட்டிக்காப்பதற்கு மாறாகச் செயல்படுகிறார்கள். இத்தகைய சூழ்நிலையில் உயர்வான சமுதாயத்தையும், மொழியையும் வளர்க்கும் நோக்கில் உருவானதுதான சிற்றிதழ்கள. சமூகத்தைச் சீரமைத்து, முற்போக்காக சிந்தித்து, மானுடத்தின் விழிப்புணர்வில் துணை நின்று மொழி வளர காரணமாக உள்ள சிற்றிதழ்களின் தன்மையைக் காண்போம்.

### தமிழ் இதழியல் சிற்றிதழ்கள்

19-ம் நூற்றாண்டிலேயே தமிழ் இதழ்கள் துவங்கப் பட்டுவிட்டன. எனினும் இதழியலை அதன் நுட்பத்தைப் புரிந்து கொண்டு வெளிவந்த இதழ்கள் 20-ஆம் நூற்றாண்டில்தான் பரவலாக வெளிவந்தன. சிற்றிதழ் வரலாறும் 20-ம் நூற்றாண்டில்தான் பரவலாக

ISBN: 97 881 928616-8-5

# 23. பழங்காலத் தமிழர்களின் அறிவியல் மருத்துவம்

முனைவர் கி. கீதா
உதவிப்பேராசிரியர்
தமிழ்த்துறை,
நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி

பழங்காலத் தமிழர்களின் அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களை இன்று நாம் அறிந்து கொள்ள நமக்குக் கிடைத்திருக்கும் தகவல் ஆதாரங்களாக பழந்தமிழ் இலக்கியம், கல்வெட்டுக்கள், செப்பேடுகள், கையெழுத்துச் சுவடிகள், ஆங்கிலேயர்கள் மற்றும் வெளிநாட்டு யாத்ரீகர்கள், அறிஞர்கள், அதிகாரிகள், ஆகியோர் எழுதி வைத்துள்ள குறிப்புகள், பழங்கால கோயில்கள், கட்டிடங்கள், பழங்கால நடைமுறைகள், கைத்தொழில்களில் ஈடுபட்டுள்ள கம்மாளர்கள், நெசவாளர்கள் போன்றவர்கள் இன்றும் பயன்படுத்தும் நுட்பங்கள் முறைகள் போன்றவை இன்றும் சித்த மருத்துவத்தில் ஈடுபட்டுள்ளவர்கள் பயன்படுத்தும் நுட்பங்கள், முறைகள் போன்றவற்றைக் குறிப்பிடலாம்.

பழங்காலத் தமிழர்களின் அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்களைத் திட்டவட்டமாகவும் முழுமையாகவும் அறிந்து கொள்ள முற்படுவது இந்தக் கட்டுரையின் நோக்கமல்ல பழங்காலத் தமிழர்களின் அறிவியல் தொழில்நுட்பக் கருத்துக்கள் சிலவற்றைக் கோடிட்டுக் காட்டி, தமிழர்களை அவர்களுடைய பாரம்பரிய பெருமைகளை உணர்ந்து கொள்ளச் செய்து, அந்தப் பாரம்பரியத்தின் தொடர்ச்சியாக நவீன அறிவியல் தொழில் நுட்ப ஆராய்ச்சிகளிலும் வேறு நடவடிக்கைகளிலும் அவர்களை முழு ஆற்றலுடன் ஈடுபடத் தூண்டுவதே இந்த ஆய்வின் நோக்கமாகும்.

# 46. மீன்பிடி தொழிலும் மரபு அறிவும்

இன்றைய அறிவியல் கண்டுபிடிப்புகளின் வருகைக்கு முன்பாக நாட்டுப்புற மக்களி அனுபவ அறிவே அரசர்களின் வாழ்வியல் மற்றும் தொழில் முறைகளில் பெரிதும் பயன்பட்ட மரபுசார் அறிவுமுறை பழமையானது எனினும் இன்றைய நவீன அறிவியல் கண்டுபிடிப்புகளுக் இணையாகவும், சிலநேரங்களில் அவற்றைவிடச் சிறந்ததாகவும் காணப்படுகின்றது. இன்றை நவீன அறிவியல் கருவிகள் வழியாக பெறுகிற உதவிகளை ஒரு காலத்தில் முழுமையா அவர்களது பட்டறிவின் வழியாகவே பெற்றனர். இன்றும்கூட நாட்டுப்புற மக்களின் மரபு அறி அவர்களின் தொழில்களின் பயன்படுகின்றது. அவ்வகையில், இயற்கையோடு இயைந்து இயற்கையோடு போராடியும் தங்கள் வாழ்க்கையை நடத்திக்கொண்டிருக்கும் மீனவர்களி மீன்பிடி தொழிலில் அவர்களின் மரபு அறிவு பயன்பட்ட, பயன்படும் முறையினைக் கண்டறிந் வெளிக்கொணர்வதை நோக்கமாகக் கொண்டு இக்கட்டுரை அமைகிறது. மீன்பிடிக்கக் கடலுக்கு செல்லும் போது அவர்களுக்குப் பயன்படும் அவர்களின் மரபு அறிவியல் சில நுட்பமா திறன்களும் காணப்படுகின்றன. குறிப்பிட்ட சில மீன்களைப் பிடிப்பதற்கான இடத்தை கண்டறிவதற்குக் கடலின் ஆழம் அறிதல், மீன் பிடிக்கச் சென்று உரிய நேரத்தில் திரும்புவதற்கு கடலின் நீரோட்டம் அறிதல், நவீன அறிவியல் கருவிகள் கண்டுபிடிக்கப்படுவதற்கு முன்பாகவு கருவிகள் வேலை செய்யாத நிலையிலும் திசை, தூரம், நேரம் ஆகியவற்றை அறிதல், கடலி மீன் பிடித்துக்கொண்டிருக்கும்போது கடல் சீற்றம் மற்றும் புயல்குறித்து அறிந்து உடனடியாக கரைக்குத் திரும்புதல், நவீன படகுகளை மரபுத் தொழிநுட்பத்துடன் பயன்படுத்துதல் ஆகிய மரபு அறிவுத் திறன்களை இக்கட்டுரை கண்டுணர்த்துகிறது. தமிழ்நாட்டின் கடற்கரையில் பாண்டிச்சேரி தொடங்கி அதிராம்பட்டினம் வரை வாழ்கிற மீனவர்களிடம் நடத்தப்பெற்ற கள ஆய்வில் பெறப்பட்ட தகவல்கள் அடிப்படையில் இக்கட்டுரை உருகாக்கம் பெறுகிறது.

## மீனவர்களும் இனமும்

தமிழ் நாட்டில் பரதவர் என்று குறிக்கப்பெற்ற மீனவர் இலக்கியங்களில் தனித்து அறியத்தக்க இனமாகக் குறிக்கப்பட்டுள்ளனர். பட்டினப்பாலையின் 78 முதல் 117 வரைவிலான நாற்பது வரிகளில் மீனவர்களின் வாழ்வியற்கூறுகள் சிறப்பித்துக் கூறப்பட்டுள்ளன. இந்த ஆய்வில் குறிப்பிடப்படும் பகுதிகளின் வழிவந்தவர்கள் இல்லை: சில நூற்றாண்டுகளாக மீன்பிடி தொழிலில் ஈடுபடுவபர்கள். எனினும், மரபுத் தொழில்நுட்பங்கள் பலவற்றை அறிந்துள்ளவர்களாகவே திகழ்கின்றனர். இன்று பாண்டிச்சேரி, சதம்பரம், பகுதிகளில் பர்வத இராஜகுலம் என்னும் வகுப்பைச் சார்ந்தவர்கள் மீன்பிடித் தொழிலைச் செய்கின்றனர். நாகப்பட்டினம், வேதாரண்யம் என்னும் பகுதிகளில் பட்டணம் மீனவர்கள் என்று தங்களை அழைத்துக்கொள்ளும் வன்னியர் என்னும் வகுப்பினர், மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர். இவர்களுள் முந்தைய பிரிவினர் தங்களைப் பரம்பரை மீனவர்கள் என்றும், தாங்கள் கடலில் மட்டுமே மீன்பிடிக்கும் மீனவர்கள் என்றும் உள்நாட்டு குளம், ஏரிகள், ஆறுகளில் மீன்படிக்கும் மீனவர்களிலிருந்து தாங்கள் வேறுபட்டவர்கள் எனவும் தெரிவிக்கின்றனர். நாகப்பட்டினம், வேதாரண்யம் பகுதிகளில் உள்ள மீனவர்கள் சில நூற்றாண்டுகளுக்கு முன்பு மீன்பிடிக்கத் தொடங்கிய தாங்கள் முன்னோர்களின் வழியில் தாங்கள் முழுமையான மீனவர்களாக மாறிவிட்டாதக் தெரிவிக்கின்றனர். அதிராம்பட்டினம் பகுதியில் மீன் பிடிவர்களாக மாறிவிட்டதாகத் தெரிவிக்கின்றனர். அதிராம்பட்டினம் பகுதியில் மீன் பிடிப்பவர்கள் தங்களைத் தேவர் வகுப்பினர் என்றும் வெள்ளாளர் வகுப்பினர் என்றும் தெரிவிக்கின்றனர். இவ்வகையில் மீன்பிடித்தொழிலில் பரம்பரையாக ஈடுபடுபவர்கள் மட்டுமல்லாது இடைக்காலத்தில் மீனவர்களாக மாறியவர்களே பெரும்பான்மையாக இப்பகுதிகளில் மீன்பிடி தொழிலில் ஈடுபடுகின்றனர் என்பது அறியலாகிறது.

## மீணவர்களின் பருவநிலை அறிவு

கடலில் மீன்பிடிக்கச் செல்லுதல் என்பது சில மணிநேரவேலையல்ல குறைந்தபட்சம் ஒரு நாள் தொடங்கி அதிகபட்சம் ஒரு வாரம் வரை மீன்பிடிக்கச் செல்பவர்கள் கடலில் இருக்க நேரிடுகிறது. நிலப்பகுதியிலிருந்து 100 கி.மீ தூரத்திற்கும் அதிகமாகச் சென்று மீன்பிடிப்பதும்

சோம. இராசேந்திரன், நேரு நினைவுக்கல்லூரி, புத்தனாம்பட்டி, திருச்சி மாவட்டம்.

ISBN - 9789350675199



# மலைப்பொழிவும் மனிதகுல மேம்பாடும்

*முனைவர் சோம.இராசேந்திரன்,*
*நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி),*
*புத்தனாம்பட்டி,*
*திருச்சி மாவட்டம்.*

தமிழிலக்கிய வரலாற்றில் கண்ணதாசனின் இயேசு காவியத்திற்குத் தனிச் சிறப்பு உண்டு. தமிழ் இலக்கிய வரலாற்றில் பக்தி இலக்கியங்கள் பெரும்பான்மையும் தமது சமயக் கொள்கைகளைப் பரப்புவதற்காகவே தமிழ்ப் புலவர்களால் முனைந்து படைக்கப்பெற்றன. இந்நிலையில், சமயம் கடந்து, மாற்றுச் சமயத்தின் கொள்கைகளைப் பேசும் ஒரு காவியத்தை ஒருவர் முழு ஈடுபாட்டோடு இயற்றுவதென்பது தனிச்சிறப்பானதாகும். அவ்வகையில், இந்து மதத்தின் மேல் பெரிதும் ஈடுபாடு கொண்ட, 'அர்த்தமுள்ள இந்து மதம்' எழுதிய கவிஞர் கண்ணதாசன் இயேசு காவியம் இயற்றியது இலக்கிய வரலாற்றிற்கு மட்டுமன்றி மனித குல வரலாற்றுக்கும் மகத்துவம் சேர்ப்பதாக அமைந்துள்ளது. அச்சிறப்பு மிக்க இயேசு காவியத்தின் மலைப் பொழிவுப் பகுதியில் இடம்பெறும் மனித குல மேம்பாட்டுக்கான சிந்தனைகள் இக்கட்டுரையில் உரிய தலைப்புகளின்கீழ் ஆய்ந்துரைக்கப்படுகின்றன.

## எண்வகை மனிதரும் ஏற்றம் தரும் சிந்தனைகளும்

இயேசு காவியத்தின் மலைப்பொழிவு[1] சீடர்களுக்காக இயேசுநாதர் சீரிய கருத்துகளைத் தொகுத்துரைத்த அறிவுரைப் பகுதியாகும். இயேசுநாதர் தம் சீடர்களுக்கு இந்தச் சமுதாயத்தை மேம்படுத்துவதற்கான சமயக் கல்வியை வழங்குகிறார். அப்பொழுது எளிய மனத்தவர் முதலாக நீதிக்காகத் துன்பம் உறுவோர் ஈறாக எண்வகை மனிதர்களை எடுத்துரைத்து ஒவ்வொரு மனிதரிடமும் இருக்கவேண்டிய உயர்ந்த பண்புகளை மட்டுமல்லாது நீக்கவேண்டிய பண்புகளையும் பட்டியலிடுகிறார். அவ்வாறு விளக்கும்போது தனிமனித மேம்பாட்டுச் சிந்தனைகளும், சமுதாய மேம்பாட்டுச் சிந்தனைகளும்

ISBN: 978-81-2342-589-4

61

# இறையன்பு படைப்புகளில் பகுத்தறிவுச் சிந்தனைகள்



முனைவர் சோம.இராசேந்திரன்
நேரு நினைவுக் கல்லூரி (தன்னாட்சி)
புத்தனாம்பட்டி - திருச்சி மாவட்டம்

மனித சமுதாயம் வளமுடன் வாழ்வதற்கான நற்கருத்துகளை வழங்குபவர்கள் சமுதாயச் சிந்தனையாளர்களாகவும் இலக்கியவாதிகளாகவும் போற்றப்படுகிறார்கள். அவ்வகையில் தற்காலச் சமுதாயச் சிந்தனையாளர்களுள் ஒருவராகத் திகழும் வெ.இறையன்பு சிறந்த இலக்கியவாதியாகவும் விளங்குகிறார். இறையன்பு படைப்புகளை ஆய்வுசெய்பவர்கள் 'சமுதாய மேம்பாட்டிற்காகப் பேசியும் எழுதியும் வருகிற இலக்கியவாதியாக' அவரைக் கண்டுணர முடியும். அவரது படைப்புகளில் "பகுத்தறிவுச் சிந்தனைகள்" வெளிப்படும் பாங்கினை ஆய்ந்துரைக்கும் நோக்கில் இக்கட்டுரை அமைகிறது.

பகுத்தறிவு என்பது கடவுள் மறுப்பு மட்டுமல்ல. ஒருவர் கூறுகிற கருத்தும் செய்கிற செயலும் அறிவுக்குப் பொருந்திவரும் தன்மையில் அமைவதேயாகும். "இவ்வுலகமும் உயிரினங்களும் கடவுளால் படைக்கப்பட்டது" என்ற கருத்தாக்கத்திலிருந்து விலகி "இயற்கையாய் ஏற்பட்டது" என்று கண்டறிந்தவர்களாலும், அப்பொழுது ஏற்பட்ட எதிர்ப்புகளைப் புறந்தள்ளி ஆய்வு மேற்கொண்டவர்களாலும்தான் இன்றைய நவீன அறிவியல் வளர்ச்சியின் பயன்களை மனிதன் துய்க்கிறான். இவ்வகையில், "உலகத்திலுள்ள எல்லாக் கணினிகளைக் காட்டிலும் ஆற்றல் பெற்றது மூளை. இதுவரை எழுதப்பட்டிருக்கின்ற எல்லாப்

3

# இராஜாஜியும்...

பகுத்தறிவைப் பயன்படுத்தக்கூடிய ஆற்றல் பெற்ற மனிதனின் சிறந்த பண்புகளுள் முதன்மையானது அன்புடைமையாகும். அன்புள்ளம் கொண்ட மனிதனே தன் சொந்த வாழ்விலும் பொது வாழ்விலும் சிறந்து விளங்கிட முடியும். மனிதகுலம் மூடநம்பிக்கைகளிலிருந்து தன்னை விடுவித்துக் கொண்டு பகுத்தறிவு பெற்றால்தான் சாதி இழிவு, வறுமை முதலான துன்பங்களிலிருந்து விடுதலை பெற்று நல்வாழ்வு வாழ முடியும் என்று கருதிய ஈ.வெ.ரா. மனித குலத்தின் மீது கொண்ட பேரன்பின் விளைவாகவே தந்தை பெரியாராய் உயர்ந்தார். தான் பிறந்து வாழ்கிற சூழலில் தான் காணத் துயருறுகிற ஓரினத்தின் அவலம் துடைக்க எண்ணிய காரணத்தால், இந்தியத் தேசியத் தலைவர்களுள் ஒருவராய் உயர்ந்து பதவிகளைப் பெற்றுச் சிறந்திருக்கக்கூடிய தந்தை பெரியார் தமிழக அரசியல் வரலாற்றின் தனிப்பெரும் தலைவராகத் திகழ்ந்து தமிழர்களின் விடுதலைக்கும், முன்னேற்றத்திற்கும் தன்னை அர்ப்பணித்துக் கொண்டார். ஆயினும் நாடு இன எல்லைகளைக் கடந்து மனிதகுலம்

முனைவர் **சோம. இராசேந்திரன்** தமிழ்ப் பேராசிரியர்,
நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி